

அமரர்.

# உயர்திரு. கனகசிங்கம் இராசதுரை

(ஓய்வுநிலை அதிபர்)

அவர்களின்

# முப்பத்தோராம் நாள் நினைவு மலர்

22-07-2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டிருப்பு-01, கல்முனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# அமரர் திரு. கனகசிங்கம் இராசதுரை

(ஓய்வு பெற்ற அதிபர்)

அவர்களின்

## 31ம் நாள்

# நினைவு மலர்

22-07-2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அணையா விளக்கே அறிவுச் சுடரே
இன்முகம் காட்டி இனியது செய்து
துன்பம் போக்கி இன்பம் அளித்து
அன்பால் எங்களை ஆர்வலன் ஆக்கி
பண்பால் அனைவரையும்
கவர்ந்திழுத்து மக்கள் மனதில்
நிலையாய் நிற்கும்
எங்கள் தெய்வம்
கனகசிங்கம் இராசதுரை
அவர்களின்
ஆத்மாவின் சாந்திக்காக
இம்மலரைச் சமர்ப்பிக்கின்றோம்.

- குடும்பத்தினர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தோற்றம்:
13-02-1936

மறைவு:
22-06-2015

அமரர்.

# உயர்திரு. கனகசிங்கம் இராசதுரை

**திதி நிருணய வெண்பா**

ஆண்டு மன்மத ஆனி இருபத்துஇரண்டு
பூண்ட பூர்வபட்ச திதிஷஷ்டி - மேன்மைமிகு
கனகசிங்கம் இராசதுரை எனும் பண்பாளன்
சேர்ந்தார் இறையடி தேவர்கள் போற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்திரு கனகசிங்கம் இராசதுரை அவர்களின் சேவை விபரங்கள்

ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை மட்டக்களப்பு
1958-1959

ஆசிரியர் தி / பள்ளிக்குடியிருப்பு அ.த.க. வித்தியாலயம் தோப்பூர்
16.07.1962-19.10.1965

ஆசிரியர் தி / அரிப்பு அ.த.க. வித்தியாலயம் கிளிவெட்டி
20.10.1965-14.06.1966

ஆசிரியர் தி / கிளிவெட்டி அ.த.க. வித்தியாலயம் கிளிவெட்டி
15.06.1966-06.02.1968

ஆசிரியர் கமு / சேனைக்குடியிருப்பு அ.த.க. வித்தியாலயம் சேனைக்குடியிருப்பு கல்முனை
07.02.1968-31.12.1969

ஆசிரியர் கமு / பாண்டிருப்பு மகா வித்தியாலயம் கல்முனை
01.01.1969-30.06.1970

ஆசிரியர் தி / பட்டித்திடல் அ.த.க. பாடசாலை தோப்பூர்
01.07.1970-31.12.1972

ஆசிரியர் தி / மல்லிகைத்தீவு அ.த.க. பாடசாலை கிளிவெட்டி
01.01.1973-28.02.1975

அதிபர் தி / பள்ளிக்குடியிருப்பு அ.த.க. பாடசாலை தோப்பூர்
01.03.1975-17.02.1985

அதிபர் தி / முன்னம்போடி அ.த.க. பாடசாலை தோப்பூர்
18.02.1985-30.11.1994

அதிபர் தி / உவர்மலை அ.த.க. பாடசாலை திருமலை (தற்காலிகம்)
18.02.1990-31.12.1990

உப அதிபர் கமு / பாண்டிருப்பு மகாவித்தியாலயம் கல்முனை
01.12.1994-12.02.1996


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் கனகசிங்கம் இராசதுரையின் வாழ்க்கைத் தடயங்கள்.

கல்முனை மாநகரில் புகழ்பூத்த பழம்பதியாம் பாண்டவர் புகழ்பரப்பி பாஞ்சாலி அருள்மழை பொழியும் முத்தமிழும் சிறந்தோங்கும் பாண்டிருப்பு மண்ணிலே பெருமைமிக்க கனகசிங்கம் மகேஸ்வரி தம்பதியரின் ஐந்தாவது புத்திரனாக 1936-02-13ல் பிறந்தவர் இராசதுரை அவர்கள். மகேஸ்வர மூர்த்தி, நடராசா, சிவராசா, பாக்கியராசா ஆகிய நான்கு சகோதரர்களும், தவமலர், ரதிமலர் ஆகிய இரண்டு சகோதரிகளும் இவரது உடன் பிறப்புகளாவர்.

தமது ஆரம்பக்கல்வியை பாண்டிருப்பு நாவலர் வித்தியாலயத்திலும் தொடர்ந்து இராமகிருஷ்ணமிசனிலும் கற்று 1953ல் க.பொ.த சிரேஷ்ட தரத்திலே சித்தியடைந்து பின்பு 1958-1959காலப்பகுதியில் மட்டக்களப்பு அ.த.க. பாடசாலையிலே ஆசிரியராக முதல் நியமனம் பெற்று தமது கல்விப்பணியினை ஆரம்பித்தார்.

தமிழ் மீது கொண்ட ஆர்வத்தினாலும் சமயம் மீது கொண்ட பக்தியினாலும் தாம்புரிகின்ற ஆசிரியப்பணியினால் மக்கள் மத்தியிலே செல்வாக்குள்ளவராகத் திகழ்ந்தார். தொடர்ந்து தி/அரிப்பு அ.த.க. பாடசாலை, தி/கிளிவெட்டி அ.த.க. பாடசாலை, கமு/சேனைக்குடியிருப்பு வித்தியாலயம், கமு/பாண்டிருப்பு இந்துமகா வித்தியாலம், தி/பட்டித்திடல் அ.த.க. பாடசாலை, தி/மல்லிகைத்தீவு அ.த.க. பாடசாலையிலே ஆசிரிய சேவையாற்றி தி/பள்ளிக்குடியிருப்பு அ.த.க. பாடசாலையின் அதிபராக 1975-03-01ல் நியமணம் பெற்றார். தொடர்ந்து தி/முன்னம்போடிவெட்டை அ.த.க. பாடசாலையில் அதிபர் சேவையாற்றி தமது பிறந்த ஊரான முன்பு ஆசிரியராகக் கடமையாற்றிய கமு/பாண்டிருப்பு மகாவித்தியாலயத்தில் 1994-12-01ல் உபஅதிபராகி 1996-02-12வரை பணிபுரிந்து ஓய்வு பெறுகின்றார். இவர் ஆசிரியராக, அதிபராக 34வருடங்கள் அளப்பரிய சேவையாற்றி ஓய்வு பெற்றதை முன்னிட்டு கமு/பாண்டிருப்பு மகா வித்தியாலயத்திலே பாடசாலையின் அதிபர் சண்முகம் சிவலிங்கம் அவர்களின் தலைமையிலே நடைபெற்ற விழாவின் சிறப்பு இன்றும் நினைவில் கொள்ளத்தக்கது.

திருகோணமலை மாவட்டப் பாடசாலைகளிலே தாம் ஆசிரியராகக் கடமை புரிந்த காலப்பகுதியில் தான் திருகோணமலை, பாலத்தடிச்சேனையைச் சேர்ந்த புகழ்பூத்த குடும்பமாகத் திகழ்ந்த விநாயகமூர்த்தி, சீதேவிப்பிள்ளை தம்பதியினரின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரேஷ்ட புத்திரியான நாகேஸ்வரியை 1968-06-27ல் திருமணம் புரிந்தார். இல்லறத்தில் நல்லறம் வளர்த்து வாழ்ந்த அன்பு வாழ்க்கையினால் வரகுணன், கிருபாகரன், சுதாகரன், நளினி, தாரணி, சதீஸ்கரன் என நான்கு ஆண்களும் இரண்டு பெண்களும் இவர்களுக்குப் பிறந்தனர்.

பிள்ளைகள் அனைவரும் நல்ல நிலையில் இருப்பதே அவரது சேவைக்கு எடுத்துக்காட்டு. வாசிக்கும் பழக்கத்தைக் கொண்ட அவர் அதிகாலையில் எழும்பி பூக்கள் பறித்து இறையடி சாற்றி கந்தசஷ்டிக் கவசம் பாடும் வழக்கத்தினைக் கொண்டவர். கதைகள் கூறிக் களிப்புறச் செய்வதில் அலாதி பிரியம். அவருக்கு ஆன்மீகத்தோடு தொடர்புள்ள அவர் ஆலயங்களில் தொண்டு செய்வதில் விருப்புள்ளவராயிருந்தார். 1985க்குப் பின் தனது சொந்த ஊரான பாண்டிருப்புக்கு வந்த பல நல்ல காரியங்களைச் செய்த அவரின் இழப்புத் தாங்கமுடியாததுதான்.

பாண்டிருப்பு ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலய சைவ பரிபாலனசபையின் தலைவராக இருந்த காலத்தில் முற்போக்கான பல வேலைகளைத் திட்டமிட்டுச் செயலானார். குறிப்பாகச் சொல்லின் பாண்டிருப்பு இந்து இளைஞர்மன்றம் உருவாவதற்கு அடிப்படை காரணகர்த்தாவாக இருந்தவர் இவரென்றே கூறலாம்.

கலை, இலக்கியவளர்ச்சியிலும் முன்னின்று உழைத்தவர். நாடகங்கள் பல மேடையேற்ற முழுமூச்சாகப் பாடுபட்டவர் இவரென்பதையும் நாம் நினைவு கூறலாம். இவரால் பலர் நடிப்புத்துறையில் முன்னேற்றம் கண்டனரெனில் அது மிகையன்று. ஆலயங்கள், பாடசாலைகள், சமய விழாக்களிலெல்லாம் சமயச் சொற்பொழிவாற்றி மக்கள் மத்தியிலே பக்தி நெறிகளை வளர்ப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். அத்துடன் தமது அரசியல் கொள்கைகளை முன்னிறுத்தி பல அரசியல் மேடைகளிலும் தமது சொற்பொழிவுகளையும் இவர் நிகழ்த்தியுள்ளார்.

அன்போடும், பண்போடும், மானுடத்தை நேசித்து வாழ்ந்த கனகசிங்கம் இராசதுரை அவர்கள் “வினைப்பயன்முடிந்தால் தினைப்பொழுதும் தங்கமுயாது” என்னும் தத்துவத்துக்கேற்ப இவ்வுலக வாழ்வைவிட்டு 2015-06-22ம் திகதி இறைபதமெய்தினார்.

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆன்மா சுவர்க்கபதியில் சுகந்தம் பெற்றுத்திகழ எல்லாம்வல்ல இறைவனை ஒன்றிணைந்து பிரார்த்திக்கின்றோம்.

- குடும்பத்தினர் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமைசேர் மனைவியின் பேரன்பு உள்ளத்திலிருந்து.

அன்போடும் பண்போடும் நம் குடும்பத்தைக் கண்ணியமாய் காத்துவந்த குலவிளக்கே! "எண்பது வயதில் என் ஆயுள் முடிந்துவிடும்" என்று நகைச்சுவையாய் சிரித்துச்சிரித்து சொன்னதை சிறிதளவும் நம்பாமல் இன்னும்பல ஆண்டுகள் வழிகாட்டும் தெய்வமாய் எங்களுடன் வாழ்வீர்கள் என்று நினைத்ததைப் பொய்யாக்கி சொன்ன சொல் தவறா உத்தமனாய்ச் சென்று விட்டீரே!

என்னோடு நீங்கள் வாழ்ந்த நாற்பத்தேழு வருடங்கள் போதுமென்று நினைத்தோ காலனவனும் உம் உயிரைப் பறித்து விட்டான்.

தினம் தினம் உங்களுக்காய் சேவை செய்ய நான் காத்திருந்தேன். உங்களைவிட்டுப் பிரிந்து ஓரிருநாட்கள் வேறெங்கு சென்றாலும் தங்காமல் ஓடி வந்துவிடுவேனே! என்னைக் கண்டவுடன் உங்கள் முகமும் பொலிவுறுவது எனக்கு மட்டும்தானே தெரியும். இனியெங்கே காண்பேன் அம்முகத்தை!

சித்திரை 12ம் திகிதி இரவுப் பொழுது பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுடன் மகிழ்வாகக் கலந்துரையாடி கதிரையில் நீங்களும் அமரந்திருக்க மற்றவர்கள் உங்களைச் சூழ அமர்ந்திருந்து சிரித்து பேசி மகிழ்ந்தது இன்றும் என் கண்முன் நிழலாடுகிறது. வரப் போகும் சித்திரைப் புத்தாண்டில் புத்தாடை அணிந்து புதுப்பொலிவுடன் சகோதரி, மச்சாள், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் அனைவரையும் ஆசீர்வதித்து கைவிசேடமும் பெற்று கம்பீரமாய் வரும் காட்சியைத்தானே கண்முன் கொண்டுவந்து கதைத்துப் பேசிக் குதூகலித்திருந்தோம். உங்கள் மனம் சொல்லியதா? குடும்பத்தாருடன் பகிர்ந்து கொள்ளும் இறுதிக் குதூகலம் இதுதானென்று? கடைசிவரை நினைக்கவில்லை விடியும் பொழுது உங்கள் வாழ்வின் அஸ்தமனத்துக்கு ஆரம்பம் என்று மறுநாள் பொழுதும் புலர்ந்தது.

கடவுள் தரிசனம் செய்துவிட்டு மீண்டும் பூக்களைத் தான் பறித்துக் கொண்டிருந்தீர்கள். ஆனால் மௌனமாய் இருந்த உங்கள் முகம் மாறுதலான உங்கள் செயல்கள் எனக்குள் ஓர் அச்சத்தை தோற்றுவித்ததே தவிர மரணத்தில் முடியும் என்று ஒருபோதும் எண்ணவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயுற்றிருந்த இருமாதங்களும் நீங்கள் வாய்திறந்து ஏதும் பேசவில்லை. ஆனால் குழந்தையைப் போல் பார்த்து கண்களால் பேசியதை யாரறிவார்?

ஆண்பிள்ளைகள் நால்வரும் சளைக்காது கண்விழித்துக் கடமை செய்தனர். இதேபோல் மருமக்களும், பெறா மக்களும் உடன் நின்று சேவை செய்தனர். மகள்மாரும், மருமக்கள்மாரும், உடன்பிறந்த சகோதரியும், உற்றார் உறவினரும் உங்களால் பேறு ற்றெு அனைத்து உள்ளங்களும் ஓடியோடி உயிரை மீட்டெடுக்கத் தவித்தனர். நானும் வேண்டாத தெய்வமில்லை, சொல்லாத மந்திரமில்லை. கடவுளே உன்கருணை எங்கே? ஏன் உன்மனம் கரையவில்லை? கண்விழித்துப்பார்த்தாலும் வாய்திறந்து ஓர் வார்த்தை பேசாமல் மனதுக்குள் புதைத்து வைத்திருக்கும் எண்ணங்கள் என்னவென்று தெரியாமல் தினம் நான்பட்ட வேதனை ஏராளமாய் என்னை வாட்டி வதைத்த போது காலனின் கட்டளைக்கு கடவுளின் அங்கீகாரம் கிடைத்தது போல் மனைவி, மக்கள் ஆழ்ந்திருக்க மௌனமாய் உங்கள் உயிர் பிரிந்ததை எப்படி மறப்பேன்? "என்றும் தங்கள் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

*பிரிவால் துயறுரும்,*
*அன்பு மனைவி,*
**இ. நாகேஸ்வரி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அருமை அப்பா!

அறிவுக்கு உறைவிடமாய்
அன்புக்கு இலக்கணமாய்
பார்ப்போர்க்கு எளிமையாய்
வேலனிடம் பக்தியாய்
வாழ்வாங்கு வாழ்ந்து
நல்வழி காட்டினீர் அப்பா!

நிழலின் அருமை வெயிலிலே தெரியும்
நீங்கள் இல்லாத போதுதான்
இழப்பின் அருமை வெகுவாய் தெரிகிறது

பிள்ளைகள் எம்வாழ்வில் பேறுகள் பல கண்டீர்!
பேரன், பேத்திகளில் பேருவகை காண்பீரே!
இன்று எம்வாழ்வில் வெறுமையை
உணர்கின்றோம் அப்பா!

நேரம் தவறாமல் கடமையே கண்ணியமாய்
வரவேற்று உபசரித்து வழிநடத்திய
வைபவங்கள் எத்தனை? எத்தனை?
இனி எம் வாழ்வில் உங்களைப் போல்
வழிநடத்த யாருமில்லையே அப்பா!

என்னையும் ஏற்றுக்கொள்ளென
நோயவனும் வந்தானே
உங்கள் சகிப்புத் தன்மையை
உலகிற்குப் பறைசாற்றத்தானோ!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுபத்திரண்டு நாட்கள் எப்படியப்பா தாங்னீர்கள்?
அத்தனை வேதனையிலும் மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார்
உறவினர் பேர் சொன்னதும்
உங்கள் முகம் மலர்ந்து விடுமே அப்பா!

எங்களுக்குத் தெரியாத முகங்கள் கூட
உங்களைத் தெரியும் என வந்தபோது
"இராஜதுரை ஐயாவைப் பார்க்க ஊரே
திரண்டு வருகிறது" என்று வைத்திய
சாலை ஊழியர்கள் வாய்விட்டுச்
சொன்னார்களே! ஐயோ வலிக்கிறதே அப்பா!

எத்தனை உறவுகள், எத்தனை
மாண்புகள் அத்தனையும்
உங்களிடமிருந்ததை
உயிர் ஊசலாடும் போது
உணர்த்தி விட்டுச் சென்றீரோ!

உங்கள் தூயமுகம் நாம் காணும்
நாள் இனி வருமோ!
ஓடி விட்டீர் உலகைவிட்டு
ஓயாது எங்கள் துயரம் அப்பாவே!

*பிரிவால் துயறுரும்,*
*மக்கள்,*
**வருணன், கிருபாகரன், சுதாகரன், சதீஸ்கரன், நளினி, தாரணி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் இதயம் கவர்ந்த மாமா!

இதயம் கவர்ந்த என் உறவே
இத்தனை காலம் வாழ்ந்து விட்டு
சொல்லாமல் கொள்ளாமல் துணை இன்றி
போனதனை நினைக்கும் போது
நெஞ்சு பொறுக்கவில்லையே - மாமா!

மருமகனாய் பார்க்காமல் மகனாய் பார்த்ததுவும்
மற்றவர்களிடத்து அன்பைச் சொரிந்ததையும்
கட்டித் தழுவி களிப்படைந்து நின்றதையும்
எண்ணிப் பார்க்கையிலே இதயம் வலிக்கிறதே - மாமா

பேரப்பிள்ளைகளுடன் பேசி மகிழ்ந்ததையும்
ஆரத்தழுவி அன்பு முத்தம் இட்டதையும்
ஆசையோடு நீ தொலைபேசியில் கதைத்ததையும்
நெஞ்சில் சுமந்திருக்க முடியவில்லையே - மாமா

மனிதருள் மாணிக்கமாய் திகழ்ந்திட்ட மாமாவே
துணிவாக காரியங்கள் துல்லியமாய் செய்து
பணிவுடன் நீயும் பழகிநின்ற காட்சியெல்லாம்
கண்ணுக்குள் நின்று கலங்கவைக்குதே மாமா!

எண்ணிப் பார்க்க முடியவில்லை உன் இழப்பை
எண்ணியவனாக கண்கண்ட தெய்வம் நீ
புண்ணியம் செய்து புகழ் பெற்று
விண்ணுலகம் சென்றிட்டாய் விரைந்து
என்றென்றும் எண்ணி எண்ணி
ஏங்கித் தவித்து இறைவனைப் பிரார்த்தித்து
ஆத்மா சாந்தியடைய ஆராதித்து நிற்கின்றேன்.

*அன்பு மருமகன்,*
**ந. ரவீந்திரராஜா**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கோபுரம் சரிந்ததேனோ!

மருமக்கள் என்பதற்கோர் மகத்துவம் தந்து
மகுடமும் சூட்டினீர்!

பரிவுடனே பேசினீர்!
பண்புடனே நடத்தினீர்!

நல்ல தமிழ் சொற்களை
நயமாய் பேசவைத்தீர்!

நற்பண்பும் நல்லறிவும் கற்றறிந்தோம் - உம்மிடத்தில்
நல்மனிதராய் நாம் வாழ - என்றும் நல்லாசி தந்தீர்!

மண்ணிற்கு பெருமை சேர்த்த
மாந்தர்கள் பலரினுள்ளும் - உமை

மாமனாராய் நாம் அடைய
என்ன தவம் செய்தோமோ!

மனம் பொறுக்குதில்லை மாமா!
மர்மமாய் வந்த மரணத்தை எண்ணி

கலகலப்பாய் பேசிவிட்டுக் காலையில் நினைவிழந்தீரே!
இன்னும் தெரியவில்லை - மனம்
இன்னும் ஆறவில்லை
கடைசிவரை ஒரு வார்த்தை பேசவில்லை
கனத்த நெஞ்சின் பாரமும் குறையவில்லை.

நின் உருக்குலைந்த கோலமது - எம்
நெஞ்சைவிட்டும் அகலவில்லை.
ஏன் இந்தக் கொடிய நோய்
வந்ததென்றும் புரியவில்லை

மரணப் படுக்கையிலும் "மாமா" என்ற குரல் கேட்டால்
மனம் நெகிழச் சிரிப்பீர்கள்!
மறக்க முடியவில்லை மாமா! உங்கள்
முகத்தை மறக்க முடியவில்லை


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உங்கள் இளைய மகன் - சதீஷனும்
கண்கலங்கி நின்றதனை - நாங்கள்
ஒருபோதும் கண்டதில்லை - மாமா!
ஒரு போதும் கண்டதில்லை
கரை சேர்க்கும் படகு நீங்கள்
கைப்பிடித்துக் கொடுக்காமல்
சென்றதுதான் நியாயமா?

மச்சாள் நளினியும் பதைபதைத்துப்
பறந்துதான் வந்தாள்
"அப்பா நான் வந்துவிட்டேன்
கண்திறந்து பாருங்கள்" என்றே
கதறியழ - போன உயிரும்
திரும்பியதே மாமா!
இனி இல்லை மரணம் என்றே
எல்லோரும் சொன்னார்கள்
மனம் பொறுக்குதில்லை - மாமா
மர்மமாய் வந்த மரணத்தை எண்ணி

கோணமலை கோபுரம் சரிந்துவிழக்
கண்ட கனா - எங்கள் கோபுரமாய்
நின்ற நீங்கள் சரியத்தான் என்று
நினைக்கவில்லை - மாமா!
ஒருபோதும் நினைக்கவில்லை

இருப்பது பொய் இறப்பது மெய் என்னும்
தத்துவம் அறிந்திருந்தும்
ஈரவிழி காயவில்லை! உங்கள்
பிரிவுத்துயர் மாறவில்லை

தப்பாமல் மறு ஜென்மம் இருந்தால்
இப்படியே உறவுவர இறைவனை
வேண்டி உங்கள்
ஆத்மா சாந்திபெற
இறைஞ்சுகின்றோம் இறையவனை.

*பாசமிகு மருமக்கள்,*

**முகுந்தன், செல்வமீனா, சுபாஷினி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரப்பிள்ளைகளின் ஆதங்கம்...

அறிவூட்டும் ஆண்களிரண்டும்
மதிபூத்த பெண்கள் எட்டும்
உங்கள் பேர் சொல்லும்
பேரன் பேத்திகளாய்
களிப்புடனே வாழ்ந்துவந்தோம்.

அன்பைக் காட்டி நல்லறிவை ஊட்டி
வையமதில் சிறந்தோங்க
வழிவகைகள் பல செய்த
கலங்கரை விளக்கமே!

அம்மப்பா அப்பப்பா என்று வரும் எங்களுக்கு
தின்பண்டங்கள் பலவும் கொடுத்து
தித்திப்பான கதைகள் பல சொல்லி
எம்மைச் சிரிக்கவைத்த நீங்கள்
ஏன் எம்மைவிட்டுப் பிரிந்தீர்?

பென்சன் பணம் வந்தால் - பிரியமாகப்
பிரித்துக் கொடுத்துப் - பின்
மகிழ்ந்து பேசியதெல்லாம்
மனக்கண்முன் வருகிறதே!

என்னைப் போல் என்பேத்தி துர்க்கா
என்று வாயாரச் சொல்லி அவள்
வார்த்தைகளை ரசித்து வாய்விட்டுச்
சிரித்த நீங்கள் மௌனமாய்ப்
போனதெங்கே?

பேரப்பிள்ளைகள் நாங்கள்
பேதலித்து நிற்கின்றோம்.
ராஜா வருவார் என்று - வாசலைப்
பார்த்து நிற்கின்றோம்.

கதறியழும் எங்களுக்குக்
காலம் பதில் சொல்லட்டும்
காத்திருப்போம் உங்கள் வரவுக்காய்

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

*பேரப்பிள்ளைகள்,*

**த.ஜெருஷினி, திலக்ஷினி, வர்ணிகா, சப்தனா, நிதுர்ஷிகா, சாங்கீத், பிரகீத், நிஷப்திகா, துர்க்காஷினி, நிதுஷ்ணவி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மச்சானின் மனதினிலே

மச்சானே மச்சானே - மகேஸ்
மாமிபெற்ற மாணிக்கமே
உனைப்பற்றி நாலுவரி
எழுதச் சொன்னாள் தங்கை நாகேஷ்வரி (மச்சானே)

நண்பனாய் பழகிடுவாய் - எனக்கு
நற் புத்திமதி கூறிடுவாய்
அவ்வாறு கூறுவதற்கு - இனி
யார் இருக்கார் என் மச்சானே.... (மச்சானே)

கிராமத்தை முன்னேற்ற (கி.மு.ச.)
சங்கத்தின் தலைவனாய்
பலரும் போற்றும் வண்ணம்
பணிகள் பல புரிந்திட்டாய்.... (மச்சானே)

இந்து இளைஞர் மன்றத்தின்
செயலாளர் பதவியினை
சிறப்புடன் செய்ததாக - நம்
பாண்டியூரான் கூறினபரே.... (மச்சானே)

வெள்ளை வேட்டி நஸ்னலுடன்
நீ செல்லும் காட்சியினை
பார்க்க பதினாறு கண்கள்
போதாது என் மச்சானே.... (மச்சானே)

அண்ணா அண்ணா என்று
அழுதிடும் உன் பிள்ளைக்கு (தவமலர்)
ஆறுதல் வார்த்தை கூற
வருவாயோ என் மச்சானே.... (மச்சானே)

மண்ணில் பிறந்தோர்க்கு மரணம் நிட்சயம்
நீ முந்திவிட்டாய் நான் பிந்திவிட்டேன்
விரைவில் உனைக்காண நான் வருவேன் - என்னை
வரவேற்க காத்திருப்பாய் என் அன்பான மச்சானே.

*"ஆண்டாண்டு தோறும் அழுது புலம்பினாலும்*
*மாண்டோர் வருவாரோ இம்மானிலத்தில்"*

- குமாரசூரியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் சொக்கிளேற் ஐயா!....

எப்பொழுதும் அவரைக் கண்டால் நாங்கள் அழைப்பது சொக்கிளேற் ஐயா! இது எங்களால் அவருக்குக் கொடுக்கப்பட்ட செல்லப்பெயர். இறக்கும் வரைக்கும் எங்களால் அழைக்கப்பட்ட பெயர் இது. அவரது அண்ணரின் பிள்ளைகள் நாங்கள். எப்பொழுதும் அவர் வீட்டுக்கு வந்தால் ஓடிச்சென்று அவரை ஆரத்தழுவி அணைத்துக் கொள்வோம். காரணம் அவரது பையில் அல்லது கையில் சொக்கிளேற் இருக்கும்.

அகன்ற நெற்றி, அழகிய வதனம், சுருண்ட முடி, சுறு சுறுப்பான செயற்பாடு, கம்பீரமான தோற்றம், கணீரென்ற குரல் எப்பொழுதும் முகத்தில் புன்சிரிப்பு வேட்டியுடன் நீறமான வெள்ளை சட்டை பார்ப்பதற்கு புதுமாப்பிள்ளை போல் இருப்பார். இவர்தான் எங்கள் சித்தப்பா (சொக்கிளேற் ஐயா)

ஐயாவைக் கண்டால் அருகில் ஓடுவோம். காரணம் அவர் எங்கள் மீது காட்டும் அன்பு அத்தோடு அவர் எங்களுக்குத் தரும் சொக்கிளேற்றின் சுவை எந்தப் பிள்ளைகள்தான் சொக்கிளேற்றை விரும்பாது? நாங்கள் அதற்கு விதிவிலக்கா என்ன? பகிர்ந்துண்ணும் பழக்கத்தை உண்டு பண்ணுவதும் அவரது நோக்கமாயிருக்கும் போலும் "எல்லோருக்கும் கொடுத்துச் சாப்பிடவேண்டும்" இது அவரது வாக்கியம். "அண்ணனிடம் வாங்கிச் சாப்பிடுங்கள்" சொல்லிவிட்டு அருகிருந்து அவதானிப்பார் நாங்களும் மகிழ்ச்சியின் எல்லைக்குச் செல்வோம். இன்று எங்கள் மனதில் அது பசு மரத்தாணி அவனியை விட்டு அவர் செல்லும் வரை எங்கள் அனைவருக்கும் அவர் சொக்கிளற் ஐயாதான்.

எடுத்த காரியத்தை முடிக்கும் திறனும் எவருடனும் அன்பாய் பழகும் பண்பும் கருணை வழியும் கண்ணும் நீ படிக்கும் கந்தசஷ்டிக் கவசமும் காதில் ஒலிக்குதையா எங்கள் சொக்கிளேற் ஐயா!

மூதூருக்குச் சென்று முழுமையாய் நீ செய்த பணியைக் கூறக்கேட்டு உள்ளம் குளிர்ச்சியடைவோம் நாங்கள். சொக்கிளேற் ஐயா இப்போது அதிபராகிவிட்டாராம். அவருக்கு அங்கு நல்ல செல்வாக்காம். என்று பலரும் கூறக் கேட்டு மகிழ்வடைவோம். இறுதியில் பாண்டிருப்பு மகா வித்தியாலயத்தில் கற்பித்தபோது அடிக்கடி கண்டு கதைக்கக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. குசலம் விசாரிப்பாய். பழைய ஞாபகங்களை மீட்டுப்பார்ப்போம்.

பாண்டிருப்பில் மன்றம் அமைத்ததுவும் விளையாட்டுப் போட்டி நடத்தியதும் அரங்கில் பேசியதும் சிவராத்திரி காலங்களிலும் சரஸ்வதி பூசை நேரங்களிலும் போட்டிகள் நடத்திப் பரிசில்கள் வழங்கியதும் கூட்டுப்பிரார்த்தனை நடத்தியதும் மறக்கவில்லை ஐயா!

நீங்கள் இறந்த செய்தி கேட்டதும் கலங்கிப் போனோம் நெஞ்சில் இடி விழுந்தது போல் இதயம் வெடித்தது போல் இருந்தது. எங்கள் சொக்கிளற் ஐயாவின் பிரிவைத்தாங்க முடியவில்லை ஐயா! உங்கள் ஆத்மா சாந்தியடையப்பிரார்த்தித்து நிற்கும்

*உங்கள் பெறா மக்கள்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்கள் புலம்பல்

மாருது எம் அன்பு சொக்லேற் ஐயா,
மறவோமே நாம் உன்தன் அன்பை
ஆறாகப் பெருகுதே கண்ணீர்
ஐயா உன் பிரிவையே எண்ணி... (மாருது)

எளியோர்கள் பலர் வாழ வழி செய்தாய்
எளியோர்க்கு இளையோனாய் நீவாழ்ந்தாய்
அழியாத புகழோடு என்றென்றும் வாழ
உமை வாழ்த்துகின்றோமே ஐயா... (மாருது)

தாய்மாமன் என்று அன்புடன் அழைத்திட
தரணியில் எமக்கு இனி யாருமில்லை ஐயாவே
கண்சிமிட்டி, கண்சிமிட்டி கதைக்கும் காட்சியினை
இனி எப்போது நாம் காண்போம் சொக்லேற் ஐயாவே, ஐயாவே

மாலை நேரம் வந்தால் வருவாய் கிழங்கு பொரியலுடன்
ஆளுக்கு ஆறுதுண்டுகள் தருவாய் நாம் ஆசைதீர உண்டு மகிழ்வோம்
சிறு பிள்ளை தனமாக சினம் கொண்டு பேசிடுவாய்
சினம் தணிந்து மறு கணம் சிரிப்பாய் எமைப் பார்த்து

அழியாச் செல்வமாம் கல்வி - அதனை
ஆர்வமுடன் கற்பித்தாய் பல மாணவர்க்கு
உன்னால் உயர்வடைந்த மாணவர்கள்
பலநூறு உண்டு இப் பாரினிலே ஐயாவே

எமை விட்டு நீ பிரிந்து சென்றாலும்
உமைவிட்டு நாம் பிரியோம் ஐயாவே
விண்ணுலகில் விடிவெள்ளியென நீ ஜொலிக்க
மண்ணுலகில் இருந்து வணங்குகின்றோம் ஐயாவே

இராதாகிருஷ்ணன் - கலைச்செல்வி
ஜெயகிருஷ்ணன்-ஜெயந்தினி
கோபிகிருஷ்ணன் - சஞ்ஜீவ்குமார்
ஜீவிதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு சோதரா......

மண்ணில் மாண்புற்ற மக்கள்
மரணித்த பின்னாலும்
மக்கள் மனதினின்றும்
மறைவதில்லை ஒரு நாளும்

ஆரம்ப வகுப்பு முதற்கொண்டு
ஆசிரியர் பயிற்சி பெறும் வரையும்
என்னோடு கல்வி கற்று
பண்பாய் பழகினீர்கள்

குறும்பும் துடிப்பும் கொண்டே
கல்வியிலும் நல்ல மேன்மையுற்றீர்
பிறருக்கு உதவி புரிவதிலே
பேரின்பம் கொண்டீர் நீங்கள்

அதிபராய் நீங்கள் பணிபுரிந்த போது
ஆசிரியர் குழாத்தோடும் அன்பாய்ப் பழகி
கடமையை நீங்கள் கண்ணியமாய் செய்து
கற்றோர் மத்தியிலே அழியாத இடம் பெற்றீர்

கலைகளிலும் உமக்கு ஆர்வமுண்டு - அதனால்
கிளிவெட்டி ஊரில் பாரதிக்காய் விழா எடுத்தீர்
மறக்காமல் என் கணவர் "நீலாவணனையும்
மதித்து வரவழைத்து மகிழ்வும் பெற்றீர்

உம் வெண்மை நிற ஆடையைப் போல்
உந்தன் உள்ளமும் வெண்ணிறமே
அழகிய உன் வதனம்
அதில் எப்போதும் புன்னகையே

சோதரனே நீர் மரணித்துப் போகவில்லை
எம் எல்லோர் மனதிலும் உம் நினைவுகளால்
எப்போதும் வாழ்ந்திருப்பீர்
உம் ஆத்ம சாந்திக்காய் வேண்டி வணங்குகிறேன்.

**திருமதி. நீலாவணன் (அழகேஸ்வரி)**
*ஓய்வுநிலை அதிபர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரிகள் ஒப்பாரி

அண்ணாவே அண்ணாவே - எங்கள்
இராஜதுரை அண்ணாவே
மண்ணுலகம் விட்டு - நீ
விண்ணுலகம் சென்றாயோ.... (அண்ணாவே)

அழகான வதனமும், அரும்பு மீசையும்,
சுருளான உன் தலைமுடியும்
மிடுக்கான உன் புன்சிரிப்பையும் - இனி
எக்காலம் நாம் காண்போம் அண்ணாவே, (அண்ணாவே)

பெயர் சொல்லி அழைக்காமல் - என்னை (தவமலர்)
பிள்ளை என்று அழைத்திடுவாய்
பாசமுடன் வரும் எனக்கு
பரிசுப் பொருள் தந்திடுவாய்... (அண்ணாவே)

காலையிலே வந்து, உன் கதிரையில் அமர்ந்திடுவாய்
நாடகம், சினிமா, பார்த்திடுவாய் நலமுடன் பேசி மகிழ்ந்திடுவோம்
வாவா வாவா என்று என்னை (ரதிமலர்) வாயார அழைத்திடுவாய்
அவ்வாறு அழைப்பதற்கு இனி யாருமில்லை அண்ணாவே

கேட்டால் தருவார்கள் பெற்றோர்கள்
கேட்காமல் தந்திடுவார் எம் அண்ணா
குறிப்பறிந்து செயலாற்றும் உன்னை - காலன்
குறிவைத்து கொண்டு சென்றான் அன்போடு

ஏழு அண்ணர் இருந்தார்கள் என்று - நாம்
இருந்தோம் இறுமாப்புடன் - அன்று
ஆறோடு ஏழாக நீயும் எமைவிட்டு சென்றாயே அண்ணா
உன் ஆத்மா சாந்தி பெற
நாம் வணங்குகின்றோம் அண்ணாவே



*ஓம் சாந்தி, ஓம் சாந்தி, ஓம் சாந்தி*

**தவமலர், ரதிமலர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேற்றுத்தான் அவரைக் கண்டேன்

மாண்புறும் மகேஸ்வரி கனகசிங்கம் தம்பதியர்க்கு
மாநிலத்தில் அவதரித்த இராசதுரை அதிபரவர்.
மக்கள் மனங்களிலே இடம் பிடித்த பண்பாளர்
மாமி மகன் எனக்கு அத்தான்
மாறாத உரித்துடைய மாமனார் திருவிளங்கம்
தம்பதியர் தமக்கு நான்மகன் என்பதனாலே
நான் அவர்க்கு உரிமையுள்ள மச்சான்
இது எங்கள் உறவுமுறை கூறுகின்றேன்
உறவுமுறை எல்லோர்க்கும் உள்ள கதை
ஊர் உலகத்தில் தெரிந்த கதை

நேற்றுத்தான் அவரைக் கண்டது போல் என்
நெஞ்சத்தை உறுத்துகிறது. ஏன்
இன்று அவர்க்கு முப்பத்துஓராம்நாள் அஞ்சலிநாள்
காற்றில் கலந்தது அவர் ஆன்மா
கடவுள் பாதம் பணிந்திடச் சென்றது
சேற்றிலே சென்நெல் நாற்று நட்டு கதிர் கண்டு
செழிப்பாக பசளையிட்டு விளைவுகண்டு
நாற்றிக்கும் வாழும் பறவையெல்லாம் உண்டு மகிழ - நாடும்
பாற்சோறு சமைத்துப் பசியாறும் பாடுபோல்
பாண்டிருப்பில் அமரர் இராசதுரை அதிபர் வாழ்ந்தமுறை

பள்ளிப்பருவமுதல் பல்கலையும் கற்று உணர்ந்து
பண்புநிறை பாவலனாய் நாவலனாய் பேறுபெற்று
பக்குவமாய் மாணவர்க்கும் பகிர்ந்தளித்து மகிழ்ச்சிகண்ட
எங்களூர் பெற்ற தவப்புதல்வன் இன்றில்லை
மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் வெள்ளிதனில்
மக்கள் மனம் மகிழ பஜனைச் சங்கமமைத்து
மற்றவரும் பாடப் பழக்கி பக்தியுடன்
வாழ வழிகாட்டிய தொண்டரானீர்
நகைச்சுவையாய் வார்த்தைகளை பேசி
நம்மவரை சிரிக்க வைத்த நகைச்சுவை நடிகன் நீ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து சமயச் சொற்பொழிவென்ன
இலக்கிய மேடைகள் என்ன
வந்தகலை கைவந்தகலை உனக்கு
வள்ளுவர்க்கும் விழாவெடுத்து
வானுயர்ந்த பாரதிக்கும் விழாவெடுத்து
தெள்ளமுதாய் இந்து சமயம் பேசி
தேசமெலாம் புகழ் பூத்த
விவேனானந்தருக்கும் விழாவெடுத்து
பாண்டிருப்பின் புகழ் விளங்க
பறைசாற்றிவைத்தனை தேசமறியும்

கணிதத்துறையில் கரைகண்ட விற்பனர்
மனிதருள் மாணிக்கமாய் வாழ்ந்தவரே
தனிமைப் படுத்திவிட்டீர் இல்வாழ்வில்
இனியவளாம் நாகேஸ்வரி இல்லத்தரசியை
பிள்ளைகளைப் பேரர்களை எல்லோரையும் மறந்து
மல்லிகை மலரொன்று காய்ந்து சருகாகி
தொல்லுலகில் துகளாக போனது போல்
இல்வாழ்வை மறந்து எல்லோரையும் விட்டு
தொல்லை இரும்பிறவித்துயர் தீர எல்லையில்லா
ஏகாந்தப் பெருவெளிக்குச் சென்றுவிட்டீர்

ஆண்டவன் அருள்புரிய தங்கள்
ஆத்துமா சாந்திபெற
அன்றுபோல் என்றும் புகழ் நிலைக்க
மனையா மக்களும் நினைவாஞ்சலிகூற
பாண்டிருப்பின் குலதெய்வம்
பாஞ்சாலி பாண்டவரும்
பரநதாமன் தானும் பக்கத்துணை இருந்து
பரமபதம் பெற்றிடவே
நினைவாஞ்கலி செலுத்தி குடும்பத்தவரோடு
தானும் பங்கு கொண்டேன்.



*மைத்துனர்,*
**பாஸ்கரன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது நல் ஆசான் சின்னஜயா அவர்கள்

இராசதுரை ஐயா (சின்னஐயா) இறைபதம் அடைந்தார் என்ற செய்தி எனக்கு மாத்திரமல்ல மூதூர் பிரதேசத்தில் அவரது மாணவர்களாக இருந்த அனைவரையும் அதிர வைத்த துயரச் செய்தியாகவே இருந்திருக்கும்.

ஒரு நல்லாசிரியன் எவ்வாறு இருக்க வேண்டும் செயற்பட வேண்டும் என்பதற்கு எமக்கு அன்றும் இன்றும் ஏன்? என்றுமே அது எமது சின்னஐயாவாகவே இருக்கும். அந்த பிரம்மை அந்த பிம்பம் அந்த ஆகார்சிப்பு மாறாது. அதற்கு எதுவும் ஈடாகாது.

மட்டு ஆசிரிய கலாசாலையிலிருந்து பயிலுநர் பயிற்சி முடித்து மூதூர் வட்டாரக் கல்விப் பிரிவின் பள்ளிக்குடியிருப்பு அ.த.க. பாடசாலைக்கு புதுவரவாக அவர் வருகின்றார். ஐம்பதாண்டுகளுக்கு மேலாகியும் அவரது வருகை எனக்கு இன்றும் நன்றாக ஞாபகமிருக்கின்றது. வெள்ளை நிறத் தேசிய உடையுடன் வெள்ளை நிற இளைஞனாக துவிச்சக்கர வண்டியில் அவர் எமது பாடசாலைக்கு வந்திறங்கினார். அன்றிருந்து எமக்கு ஆசிரியராக அறிமுகமாக தன் பணியினைத் தொடர்ந்தார்.

அவரது வருகை எமது கல்விக் காலத்தில் பொற்காலமாக மாறப்போகின்றது என்றோ கல்வியில் எமது தலையெழுத்தை மாற்றப் போகிறது என்றோ நாம் அன்று அறியவில்லை. அதைப் புரிந்து கொள்ளும் பக்குவமும் எமக்கு இல்லை. ஆனால் நடந்தது அதுவே என்று பின்னர் அறிந்து கொண்டோம். பக்குவம் பெற்று புரிந்து கொண்டோம்.

மூன்று ஆசிரியர் (அதிபர் உட்பட) கொண்ட எமது பாடசாலைக்கு நான்காவது ஆசிரியராக வந்தார். அக்காலத்தில் எமது பாடசாலையில் ஆசிரியர்களை "சேர்" என்றோ "ரீச்சர்" என்றோ அழைக்கும் வழக்கம் எமக்கு இல்லை. அதிபர் பெரிய ஐயாவாகவும் மற்றவர்கள் ஐயாவாகவும் சிறியவர்கள் எனின் சின்னஐயாவாகவும் ரீச்சர் எனின் பெரிய அக்கா சின்ன அக்கா என்றும் அழைப்பதே எனது வழக்கம். அந்தவகையில் தான் இளைஞனான இராசதுரை ஆசிரியர் எமக்கு சின்னஐயாவாகின்றார். மாணவர்க்கு மட்டுமல்ல எமது கிராமத்தவர் அனைவருக்குமே அவர் சின்னஐயாவாகவே என்றும் இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பத்தில் ஐந்தாம் வகுப்பு வரை இருந்த எமது பாடசாலை சின்னஐயா வருகையின் பின்பு ஆறு, ஏழு, எட்டு என வகுப்புக்கள் உயர்ந்து சென்றது.

எண்கணிதம், பொதுவிஞ்ஞானம், சுகாதாரம், பூமிசாஸ்திரம், சரித்திரம், குடியியல், கைப்பணி சித்திம் என்று சகல பாடங்களுடனும் உடற்பயிற்சி, விளையாட்டு, மாணவர் மன்றம், கலைமன்றம், சமயவழிபாடு என்று சகல புறக்கிருத்திய செயற்பாடுகளிலும் தனியாகவும் சக ஆசிரியர்களுடனும் இணைந்து பணியாற்றி அதில் வெற்றியும் கண்டார். இதற்கு மணி முத்தான உதாரணம் மூன்றாம் வகுப்பு மாணவனை டபிள் பிரமோஷன் மூலம் ஐந்தாம் வகுப்பிற்கு உயர்த்தி புலமைப்பரீட்சைக்கு தோற்ற வைத்து அம்மாணவனை சித்தியடைய வைத்து மூதூர் கல்வி வட்டாரத்திலேயே முத்திரை பதித்தமை அவரது கல்விப் பணியின் இமயச் சாதனை ஆகும். இது நடந்தது 1963இல் இன்று நம்பமுடியாத விடயம். ஆனால் ஆச்சரியத்தக்க சாதனை அம்மாணவன் நான் என்பதனை இவ்விடத்தில் அடக்கத்துடன் கூறுகின்றேன்.

உணவு உண்பதைத் தவிர ஏனைய எமது எல்லா நேரங்களிலும் மாணவர்கள் அனைவரும் அவருடனேயே இருப்போம் இரவு 09.30 மணி வரையும் கல்விச் செயற்பாடுகளில் எம்மை ஈடுபடுத்துவார். சுருக்கமாகக் கூறின் அவரிடம் கல்வி கற்றகாலம் ஒரு பாடசாலைக் கல்விச் செயற்பாடு போல் அல்லது குருகுலக் கல்வியாகவே இருந்தது.

கடுமையான தண்டனை தரும் கண்டிப்பு மிக்க கனிவான ஆசிரியர் அவர். அவரது கண்டிப்பு எனக்குத் தண்டனையாக என்றும் இருந்ததில்லை எம்மை நெறிப்படுத்துபவையாகவே இருந்தது.

அவரது செயற்பாடுகள் பாடசாலை மாணவர் என்பதாக மட்டும் மட்டுப்படவில்லை பாடசாலையுடன் எமது கிராமத்தையே இணைத்தார். வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் மாணவர் மன்றச் செயற்பாடுகள் வருடந்தோறும் நடைபெறும் வாணிவிழா செயற்பாடுகள் கோயில் திருவிழாக்கள் கிராமத்தில் நடைபெறும் குடும்ப நிகழ்வுகள் அனைத்திலும் மாணவர்களையும் கிராம இளைஞர்களையும் பங்குபெற வைத்தார்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அக்கால மூதூர் வட்டார கல்விப் பிரதேசத்தின் சகல பாடசாலை சமூகத்தினராலும் கல்விச் செயற்பாடுகள் புறக்கிருத்தியச் செயற்பாடுகள் அனைத்திலும் பள்ளிக்குடியிருப்பு அ.த.க. பாடசாலை என்ற பெயரை விழி உயர்த்தி நோக்க வைத்த பெருமகனார்.

அவர் பற்றி கூறுவதற்கு நினைப்பதற்கு நிறையவே உண்டு. சுருக்கமாக இன்று மூதூர் பிரதேசத்தில் அரச உயர் பதவி வகித்த அல்லது வகிக்கின்ற பலரை உருவாக்கிய ஒரு பெரும் ஆளுமை அவர்.

அவரிடம் நாம் கற்றதும் பெற்றதும் ஆனந்தம்.

அவரிடம் கற்றது நாம் பெற்ற பாக்கியம் பெரும் பேறு.

இறுதியாக தனிப்பட்ட வகையில் எனது ஒவ்வொரு உயர்ச்சியிலும் வளர்ச்சியிலும் எனக்கு உரமாக வளமாக பலமாக நின்று வழி நடத்தியவர்.

எனது இதயத்தில் என்றும் மறவாத தனி இடம் கொண்டவர் தனித் தடம் பதித்தவர் என்னைப் புடம் போட்டவர் என்னை இனம் கண்டு உருவாக்கியவர்.

அவர் எனது நல்ல ஆசான் சின்னஐயா அவர்கள்.

அவரது பாத கமலங்களில் என் இதயபூர்வமான கண்ணீர் அஞ்சலிகள்.

**கந்தையா தவராஜா**
*(மாகாணப் பணிப்பாளர் (ஓய்வு நிலை) கிழக்கு,*
*தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்)*
*பள்ளிக்குடியிருப்பு,*
*தோப்பூர்.*




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஆசிரியத்துவமும் முகாமைத்துவ திறன் மிக்க ஆசான் திரு.க. இராசதுரை ஓய்வுநிலை அதிபர் அவர்களின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திப்போம்.

"ஒரு ஆசிரியர் இவர் எனது மாணவன் என்று கூறுவதை விட மாணவன் இவர் எனது ஆசிரியர் என்று கூற வேண்டும்" அந்த வகையில் மாணவனாகிய எனது மதிப்பிற்குரிய ஆசிரியரை எமது வாழ்நாள் ஆசானாக உள்ளத்திலேற்று தினம் நினைவு கூறுவதுடன் வழிபடுகின்றேன்.

திரு.க. இராசதுரை அவர்கள் தமது ஆசிரியை பயிற்சியை முடித்து தி/மூதூர் பிரதேசத்தில் பள்ளி குடியிருப்பு கலைமகள் வித்தியாலயத்தில் ஆசிரியராக கடமை ஏற்று பாடசாலை கலைத்திட்ட விடயங்களை ஒரு பாடசாலையாக செய்யப்பட வேண்டிய அனைத்து விடயங்களையும் வினைத்திறனுடன் செயற்படுத்தினார். சிறந்த கற்பித்தல் ஆற்றலுடன் இணை கலைத்திட்ட விடயங்கள் தமிழ் திறன் போட்டிகள், சமய விழாக்கள், விளையாட்டுப்போட்டிகள், சாரணர் இயக்கம் முதலான பல விடயங்களை சிறப்பாக செயற்படுத்தி ஆரம்ப அறிவை மிகவும் சிறப்பான அத்திவாரமாக இட்டமையால் பல்துறைகளிலும் தரமான மனிதர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர்.

மூதூர் பிரதேசத்தில் தி/கிளிவெட்டி ம.வி, தி/மல்லிகைத்தீவு ம.வி, தி/பட்டித்திடல் ம.வி முதலான பாடசாலைகளில் உயர்தரங்களில் சிறப்பாக கற்பித்த ஆற்றல் உள்ளவர். குறிப்பாக கணிதம், தமிழ் ஆகிய பாடங்களில் மேலதிக திறனுடன் இலவசமாக க.பொ.த சாதாரண தர பரீட்சைகளில் சித்தியடையாதோரை சித்தியடைய செய்த பெருமைக்கு உரியவர்.

பேச்சாற்றல் எழுத்தாற்றல் சிறந்த விளையாட்டு வீரராகவும் திகழ்ந்தவர். அதிபர் போட்டிப் பரீட்டைசியில் சித்தியடைந்த பின் அதிபராக மீண்டும் எமது தி/பள்ளி குடியிருப்புக்கு பெற்றோரின் முழு விருப்பத்துடன் கடமை ஏற்று செயல்பட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த தொடர்பாடல் திறனால் அனைத்து பெற்றார் பழைய மாணவர்களை இணைத்து பல சாதனைகளை புரிந்தார். நேர முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம், கலைத்திட்ட முகாமைத்துவம் முதலான பாடசாலை முகாமைத்துவத்தில் சிறப்பான தேர்ச்சி உடையவராக பாடசாலை சமூகத்தில் பெரு மதிப்பை பெற்றார். நேர்மையும் துணிவும் நன்னடத்தைகளும் அதிபருக்கான இலட்சணங்களும் கொண்ட அதிபர் இப்பிரதேசத்தின் நன் மதிப்பை பெற்றிருந்தார்.

கல்முனை பிரதேசத்திற்கு அதிபருக்கான வாண்மை விருத்தி கருத்தரங்குகளுக்கு வரும் ஒவ்வொரு வேளைகளிலும் எமது குருவின் காலில் விழுந்து ஆசிபெறும் போது மிகவும் திருப்தியாக இருக்கும். ஐயாவும் உளமார வாழ்த்துவதையும் அறிவேன்.

அதிபர் ஆசிரியர் வாண்மை விருத்தியில் சகலகலா வல்லவனாக திகழ்ந்தவர்.

சிறந்த விருந்தோம்பல் பண்புடைய சமூக மதிப்பை பெற்ற மனைவியையும் பண்பான பிள்ளைச் செல்வங்களையும் பெற்றிருந்தவர் எமது ஆசான் ஓய்வு நிலை அதிபரான இவரின் இழப்பு ஈடு செய்ய முடியாதெனினும் நீண்ட காலம் சுமார் 80 வருடங்கள் இவ்வுலகில் மிகவும் தரமான மனிதனாக வாழ்ந்தமை பெருமைக்கு உரியது. அன்னார் இயற்கை எய்தினார் என்பதே உண்மையானது என ஆறுதல் அடைவதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்போம்.

*தி/பள்ளிக்குடியிருப்பு,*
*தோப்பூர்.*

*ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும் மாணவன்*
**ஆ. செல்வநாயகம்.**
*பிரதிக் கல்விப்பணிப்பாளர்,*
*வலயக்கல்வி அலுவலகம்,*
*திருக்கோவில்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் உள்ளம் நிறைந்த இராசதுரை அண்ணல்....

பாஞ்சாலி கதையை பக்குவமாய் எடுத்தியம்பும்
பாண்டிருப்பு என்னும் பண்பான நல்லூரில்
இனிய நங்கை மகேஸ்வரி கைபிடித்து
பணிவு மிகு கனகசிங்கம் பாங்காய் இணைந்ததனால்
கனியமுது கற்கண்டு தேன்பாகாய் வந்துதித்தார்
அமுதமெனும் இராசதுரை அண்ணல்!

"விளையும் பயிரை முளையிலே தெரியும்"
இளமையின் துடிப்பு இயல்பாய் அமைய
கல்வியில் நாட்டம் கூடி நிற்க
விளையாட்டுத் துறையிலும் கால் பதித்து
கலை நிகழ்வுகள் பலதிலும் பங்கு கொண்டார்
பண்பின் சிகரம் இராசதுரை அண்ணல்!

ஆன்மீகம் அவரை அழைத்தது கண்டு
துள்ளிச் சென்று மன்றம் அமைக்க
இளைஞர்கள் பலரும் இணைந்து கொள்ள
இறை புகழ் பாடி இன்பமடைந்து
போட்டிகள் பற்பல நடத்தி முடித்து
பரிசில்கள் பலவும் வாங்கி வழங்கி
மகிழ்ந்து நின்றார் இராசதுரை அண்ணல்!

காலம் கடந்தது பதவியும் கிடைத்தது
மூதூர் செல்ல நேரமும் வந்தது
"யாதும் ஊரே யாவரும் கேளிர்"
பொருளை உணர்ந்த நல்ல உள்ளம்
சென்று அங்கு சேவை செய்ய
மக்கள் மதித்து போற்றி நிற்க
வாழ்ந்தார் சிறந்து இராசதுரை அண்ணல்!



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆற்றிய சேவைக்கு வெகுமதி போல
அதிபர் பதவியும் இலகுவில் கிடைக்க
மகிழ்வுடன் அதனை ஏற்று நின்று
மாணவர் சிறக்க சாதனை செய்தார்
மாண்புமிகு பண்பாளன் இராசதுரை அண்ணல்!

சேவையின் போது தேடிய சொத்து
வினாயகமூர்த்தி சீதேவிப்பிள்ளை பெற்றெடுத்த முத்து
அன்பின் இருப்பிடம் அமைதியின் பிறப்பிடம்
குணநிறை குன்று குலத்தின் விளக்கு
பண்பு நிறை நங்கை நாகேஸ்வரி
இணைந்திடப் பெற்றார் இல்வாழ்வில் இன்பம்
எங்கள் அன்பு இராசதுரை அண்ணல்!

மணவாழ்க்கை தானும் மகிழ்வுடன் சிறக்க
மக்கள் செல்வமும் நிறைவாகக் கிடைத்தது
குணநிறை வரகுணன், பணிவான இருபாரகன்,
குறையில்லா சுதாகரன், நன்சொல்லாள் நளினி,
தங்கமான தாரணி, சந்தோஷமான சதீஸ்கரன்
அறுவரும் அன்பைச் சொரிந்து நிற்க
உள்ளம் மகிழ்ந்து உவகை கொண்டார்
உத்தமர் எங்கள் இராசதுரை அண்ணல்!

மண்ணின் மைந்தன் மறக்கொணாப் பண்பாளன்
மக்கள் மனதில் நிறைந்திருக்கும் குணவாளன்
தனக்கென வாழாத் தனித்தன்மை உடையோன்
கலங்கரை விளக்காய் ஜொலித்த செம்மல்
கடிதென வந்த காலன் கண்பட
தன்னுடல் விட்டு விண்ணது சேர்ந்தார்
சிரித்த முகத்தோன் இராசதுரை அண்ணல்!



**அண்ணலின் ஆத்மா சாந்திக்காக இறையடியை வேண்டி வணங்கி நிற்கும்.**

**கா. சந்திரலிங்கம்** *(ஓய்வுநிலை அதிபர்)*
சேனைக்குடியிருப்பு-01,, கல்முனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கியத் துறையில் என்னைக் கவர்ந்த ஆசான் அமரர். இராஜதுரை அவர்கள்.

1961ஆம் ஆண்டில் ஆசிரியத் தொழிலுக்காக மூதூர் மண்ணில் காலடி பதித்த அமரர். இராஜதுரை (ஓய்வு நிலை அதிபர்) அவர்கள் எனக்கு கிளிவெட்டி மகாவித்தியாலயதில் ஆறாம், ஏழாம், எட்டாம் வகுப்புகளில் தமிழோடு, சமயமும் கலந்து கற்பித்த ஆசான். பள்ளிக்குடியிருப்பு கிராமத்தில் முதன் முதலில் தனது ஆசிரியப் பணியை ஆரம்பித்து பின்னர் கிளிவெட்டி மகாவித்தியாலயம் முன்னம் போடி வெட்டை அதக பாடசாலைகளில் ஆசிரியராகவும், அதிபராகவும் சிறப்பாகப் பணியாற்றியவர்.

நெஞ்சிலிட்ட கோலமெல்லாம் அழிவதில்லை என்றுமது கலைவதில்லை எண்ணங்களும் மறைவதில்லை. நான் கிளிவெட்டி மகாவித்தியாலயத்தில் கற்றுக் கொண்டிருந்த வேளையில் கலை இலக்கியத்துறையில் மிகச் சிறந்த ஈடுபாடு கொண்டிருந்த போது இவரது பொறுப்பில் நடாத்தப்பட்ட இலக்கிய விழாவின் சிறப்பினை எண்ணிப்பார்க்கிறேன். இதுவரை இப்படியொரு இலக்கிய விழாவினை என்மனதில் இடம்பிடித்த விழாவினைக் காணமுடியவில்லை அது என் நெஞ்சில் நிழலாகுகின்றது அவர் சிறந்த பேச்சாளராக, நடிகராக, நாடக ஆசிரியராக, கலை இலக்கிய ஆர்வலராக விளங்கியவர்.

பாண்டிருப்பில் பிறந்து வளர்ந்து கல்விகற்று சித்திபெற்று தொழிலின் நிமித்தம் மூதூருக்கு வந்து பாலத்தடிச் சேனையில் இல்லறத்தில் இணைந்து வாழ்ந்திருந்த வேளை எனக்கு உறவினராக ஊரவராக உற்ற நல்லாசானாக விளங்கியதை என்னால் இன்னும் மறக்கமுடியவில்லை. என்னைக் கலை இலக்கியத்துறையில் காதல் கொள்ளவைத்த ஆசான் என்று கூறிக் கொள்வதில் நான் பெருமையும், பேருவகையும் அடைகின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னிடம் கற்றவர்கள் உயர் நிலையில் உன்னத இடத்தில் உன்னை பார்த்து உவகை அடைவதில் உள்ளத்தில் மகிழ்ச்சி கொள்வதில் மற்றவர்களுக்கு எடுத்துக் கூறுவதில் அவருக்கு நிகர் அவரேயாகும். இரண்டு வருடங்களுக்கு முன்னர் எமது ஊரைச் சேர்ந்தவரும் எங்கள் உறவினரின் இயற்கை எய்தியஇறுதிச் சடங்கில் கலந்து கொள்ள வந்திருந்தபோது என்னை அன்போடு அழைத்து அருகில் இருத்தி நலம் விசாரித்து நான் வசிக்கும் பதவிதனைக் கேட்டு மனம் மகிழ்ந்து மற்றவர்களிடம் புகழ்ந்துரைத்த அந்த மதிப்பான வார்த்தைகளை மனம் மறக்கவில்லை. பாசமும் பற்றுமுள்ள நல்லாசானாக நிறைய மாணவச் செல்வங்களை உருவாக்கியவர். "ஆசிரியப்பணி அறப்பணி அதற்கு உன்னை அர்ப்பணி" என்பதற்கேற்ப வாழ்ந்து காட்டியவர்.

அவர் அமரத்துவம் இயற்கை எய்திய செய்தி என்னை அதிர்ச்சி அடைய வைத்தது. அவரது இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள என்னால் ஆன முயற்சிகளை மேற்கொண்டபோதும் எனக்கிருந்த கடமையின் நிமித்தம்என்னால் கலந்து கொள்ள முடியாமல் போனது கவலையும், வேதனையும் தந்தது. அமரத்துவம் அடைந்த அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனடி சேர இறைவனை இறைஞ்சுகின்றேன். அன்னாரின் பாரியார், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மற்றும் சூழவுள்ள உற்றார், உறவினர்க்கும் எங்கள் குடும்பத்தினர் சார்பில் 31ம் நாளுக்கு நினைவஞ்சலி செலுத்துகின்றேன்.

14/3,A-4 *கணக்குப்பிள்ளை வீதி,*
*நாவற்குடா,*
*மட்டக்களப்பு.*

**செல்லத்துரை லோகராஜா**
*பிரதிக்கல்விப் பணிப்பாளர் (மூதூர்வலயம்),*
*பதில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் (ஈச்சிலம்பற்று.)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாளின் சிலகணங்கள்....

**எமக்குத் தெரியாத ஒரு கணத்தில்**
**எமக்கென்று ஒரு படுக்கையும்**
**எமக்கென்று ஒரு பயணமும்**
**உள்ளதென்பதே நிஜம்.**
**அதற்குள்.... அதுவரையில்....**
**ஆடி ஓடித் திரிதல்களுடன் தொடர்கிறதுதான் வாழ்வு.**

நினைத்துப் பேசப்பட வேண்டிய நினைவில் கொள்ள வேண்டிய பலர் எமது ஊரில் வாழ்ந்து இம் மண்ணுக்கு தங்களின் பங்களிப்பினை வழங்கியுள்ளனர். அவர்களுள் கல்விமான்கள் சமூகசேவகர்கள் கலைஞர்கள் எழுத்தாளர்கள் விளையாட்டு வீரர்கள் ஆன்மீகப் பணிசெய்தவர்கள் என பலரும் இதில் அடங்குவர்.

ஓர் ஆசிரியராக மட்டுமன்றி சமய சமூக பணிகளிலும் தன்னை ஈடுபடுத்தி ஊரின் இன்றைய தலைமுறைக்கு தெரியாத ஆனால் நிச்சயம் மறக்க முடியாத சிலருள் ஒருவராய் இருப்பவர் இராஜதுரை அண்ணர் அவர்கள்

பாண்டிருப்பு ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தின் சைவ பரிபாலனசபையின் தலைவராய் இவர் பணியாற்றியமையும் அவர் காட்டிய வழிநடத்தல்களுமே பின்னாட்களில் சைவ பரிபாலன சபை இந்து இளைஞர் மன்றமாக மாற்றமடைய ஓர் உந்துசக்தியாக அமைந்தது. ஆம் நானறிந்தது முதல் சைவபரிபாலனசபையின் தலைவர் கோயிலில் நடக்கின்ற கூட்டுப் பிரார்த்தனைகளின் போது பாடாமல் இருந்தமைக்காக இவரிடம் வாங்கியதிட்டுதல்கள்... கண்டிப்புக்கள் இன்னும் என் நினைவில்

தோப்பூரில் எனது தந்தையார் ஆசிரியராய் பணியாற்றிய காலத்தில் அவரும் அங்குதான் ஆசிரியராக பணியாற்றிக்கொண்டிருந்தார் விடுமுறை நாட்களில் அங்கு சென்றபோது இராஜதுரை அண்ணனை அங்கு கண்டேன். அவர் மீதுள்ள பயம் கலந்த மரியாதையுடன் தயங்கத் தயங்கி நின்ற என்னை அன்புடன் விசாரித்தார். தோப்பூரின் அண்மைய கிராமங்களான மூதூர், நல்லூர், சம்பூர், கிளிவெட்டி போன்ற இடங்களுக்கெல்லாம் அவருடனும் அப்பாவுடனும் பயணித்த என் பால்யகாலத்துப் படப்பிடிப்புக்கள் இன்னும் என் மனதில் பசுமையாய் நீழ்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்களான விபுணசேகரம், கனகரெத்தினம் ஆகியவர்களுடன் இலங்கையின் பிரபல சிறுகதை எழுத்தாளர் வ.அ. இராசரெத்தினம் மற்றும் இலங்கை வானொலியின் அன்றைய முதல்தர அறிவிப்பாளர் அப்துல் கபூர் அவரது சகோதரரான தோப்பூர் தபால் அதிபர் போன்ற நண்பர்கள் கூட்டத்தில் இராஜதுரை அண்ணர் அவர்கள் ஓர் அமைதியான பங்காளி. அவரது சிரித்த முகமும் சுருண்ட தலைமுடியும் சில மகிழ்ச்சியான தருணங்களில் நண்பர்களிடையே ஒரு பேசு பொருளாகக் கூட இருக்கும். கோபம் சினம் என்ற வார்த்தைகளுக்கான அர்த்தத்தை இவரிடம் நானாக கண்ட அனுபவம் எனக்கில்லை. கண்டிப்பு இருந்தது திட்டுதல் இருந்தது ஆனால் வெறுப்படைந்து அவர் யார் மனதையும் நோகடித்திருப்பார் என்று என்னால் கூறமுடியாது.

தன் மென்மையான பேச்சினாலும் அமைதியான சுபாவத்தினாலும் இதய சுத்தியுடன் சமய சமூக பணிசெய்த இராஜதுரை அண்ணர் அவர்களது வாழ்வு இண்று நமதூர் விடயங்களில் முன்னின்று உழைக்கின்ற சமய சமூக பணியாளர்கள் மனதில் நிறைவான ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை மீண்டும் பதிவு செய்து கொள்ளகின்றேன்.

- சபாசபேஷன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மாவின் செல்கையும் வருகையும்

## (ஆதார நூல் பகவத்கீதை)

அண்ணன் இராசதுரை அவர்களின் ஆத்ம சாந்திக்கிரியைக்காக எனது அந்திமகாலத்துப் பூக்களால் அர்ச்சித்து அவரைப் பற்றிய சில உண்மைகளைச் சொல்கிறேன்.

அண்ணன் இராசதுரை தூய்மையானவர்,அவர் என்றும் எவருக்கும் உண்மையானவர், அண்ணன் இராசதுரை அழகானவர், அவர் ஒரு சிறந்த நல்ல மனிதர், அண்ணன் இராசதுரை ஒரு கல்விக்கடல், அவர் நூல்களை வாசிப்பதில் மிகவும் பிரியமானவர், அண்ணன் இராசதுரையின் தமிழ் தூயது இனிமையானது, அவர் மேடையில் பேசினால் சர்க்கரைப்பந்தலைத் தேன்மழைநனைத்துக் கரைத்தது போல் சுவையாக இருக்கும், நல்லாசிரியன், பண்பாளன், புன்னகை அவரோடு ஒட்டிப்பிறந்த சகோதரனாய் அவர் முகத்தில் நிலைத்திருக்கும், பிடிவாதக்காரன் ஆனால் பழிவாங்கும் எண்ணமற்றவர், நியாயமான விடயங்களில் அவர் பிடிவாதம் எனக்குப் பிடிக்கும். எல்லாவற்றையும் விட அவர் சிறந்த சமையல்காரன். அவரது முருங்கையிலைச் சுண்டல், கீரைக் கடையல் எனக்கு மிகவும் பிடிக்கும். பெண்களுக்குக் கூட அவரது கைப்பக்குவம் வராது.

அண்ணன் இராசதுரை பயன் கருதா கல்விப் பணிசெய்த ஒருஅதியுத்தம ஆசிரியர், அதிபர். அவரைப்பற்றி இன்னும் எவ்வளவோ சொல்லிக்கொண்டு போகலாம்.

மனைவியை அடக்கியும், மனைவிக்கு அடங்கியும் தன் பிள்ளைகளுக்காக தனது சுகங்களைத் தூக்கியெறிந்து துன்பத்தைச் சுமந்த செம்மல். அப்படியான குணவானின் என் அண்ணன் இராசதுரை அவர்களின் ஞாபகார்த்தமாக இச்சிறு கட்டுரையை பகவத் கீதையை ஆதாரமாக்க கொண்டு எழுதியுள்ளேன். இது முழுக்க கீதையின் சாரமுமே எனது சிந்தனையில் உதித்தவை எதுவுமில்லை. வசன நடைமட்டும் என்னுடையது. பிழைகள் இருந்தால் மன்னிக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்மா பிறப்பற்றது, அழிவற்றது அதற்கு உற்பத்தியும் கிடையாது, இருப்பும் கிடையாது. மனிதன் உட்பட சகல உயிரினங்களுக்கும் நிச்சயம் இரண்டு சம்பவங்கள் நிகழும். ஒன்று பிறப்பு இரண்டு மரணம். நிச்சயிக்கப்பட்ட ஒரு மாதத்தில் ஒரு நாளில் பிறப்பு நிகழும். இது நாம் அறிந்தது. ஆனால் மரணம் அப்படி நிகழ்வதில்லை. எப்போது? எங்கே? எப்படி? என்ற வினாக்களுக்கு இன்றும் என்றும் விடை தெரியாத சம்பவம்தான் மரணம். சகல உயிரினங்களிலும் சர்வ வல்லமை பொருந்திய "ஆத்மா" உண்டு. இந்த ஆத்மாவுக்கும் மனிதனைப் போன்று பிற மனிதர்களை உற்பத்தி செய்யும் தன்மை இல்லை. அது அதுவாகவே இருக்கும். அதற்கு நிரந்தமான இருப்பும் கிடையாது. மாறிக்கொண்டேயிருக்கும்.

ஒரு மனிதன் மரணத்தருவாயில் எதை நினைத்துக் கொண்டு இறக்கின்றானோ அதையே அவன் அடைகின்றான். எதை வாழ்க்கையில் அதிகமாகச் சிந்திக்கின்றானோ அல்லது நேசிக்கின்றானோ அதுதான் அவனது கடைசிக்காலத்தில் நினைவுக்கு வரும். இறைவனை அடைய வேண்டும் என்ற விருப்பமுள்ளவன் கடைசி நேரத்தில் இறைவனை நினைத்துக்கொள்வது அவசியம் என்பது உண்மையும் சத்தியமும் கூட. இந்த விடயத்தில் ஒவ்வொரு மனிதனதும் வாழ்க்கையின் இரகசியங்கள் நிச்சயம் வெளிப்பட சந்தர்ப்பம் உண்டு. வாழ்க்கை அழிவது என்பதன் அடையாளந்தான் மரணம். எனவே நாம் நம் மனதில் ஒன்றைமட்டும் நிச்சயப்படுத்திக் கொள்வது நல்லது. வாழ்க்கையில் எந்தப் பொருட்களுடன் சேர்க்கை ஏற்படுகிறதோ அவற்றில் ஒன்று கூட நிலைத்துநிற்கக்கூடியதல்ல. எப்பொழுதும் நம்மோடு இருப்பதுமல்ல. நம்மோடு இறுதிவரை வருவதுமில்லை.

ஆத்மாவின் பயணங்கள் இரண்டு வகையில் இடம் பெறுகின்றன. அவை சுக்கில மார்க்கம். கிருஷ்ணமார்க்கம் (கிருஷ்ண என்பது இருளைக் குறிக்கும்) என்று பெயர் புண்ணியம் செய்த மனிதனின் ஆத்மா பரமாத்மாவினுடைய பரமநாமம் சென்றடையும் மார்க்கம் ஒளிமயமானது, திவ்வியமானது. அதை ஆளும் தேவதைகளும் ஒளிமயமானவர்கள். அதில் பயணம் செய்யும் ஆத்மாக்களும் ஞான ஒளியால் நிரம்பப்பட்டவர்கள். ஆகவே அந்த மார்க்கம் சுக்ல மார்க்கம் ஒளிமயமானது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆனால் பிரம்மாவின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கின்ற தேவ லோகங்களுக்குச் செல்லும் மார்க்கம் சுக்கில மார்க்கத்தைக் காட்டிலும் இருண்டது. அதில் வருகின்ற தேவதைகளும் இருண்ட உருவம் கொண்டவர்கள். அதில் செல்கின்றவர்களும் அஞ்ஞான இருள் சூழ்ந்தவர்கள். ஆகவே அதற்கு இருள் மயமானது கிருஷ்ணமார்க்கம் என்று பெயர். எங்கே சென்றால் மனிதன் திரும்பிவரமாட்டானோ அது பகவானுடைய பரம தாமம். இவர்கள் தான் அக்கிலமார்க்கத்தில் செல்பவர்கள். இவர்களுக்குப் பிறவிகிடையாது. கிருஷ்ண மார்க்கத்தின் வழியே சென்றடையும் எல்லா மனிதர்களும் மீண்டும். பூமியின் மடியில் பிறக்கத்தான் வேண்டும்.

பயன்கருதாது நல்ல கர்மங்களைச் செய்து தெய்வத்தை பூசித்த ஆத்மாக்கள் கிருஷ்ணமார்க்கத்தில் சென்று தம் தம் கர்ம வினையின் படி தேவலோகங்களைப் போய்ச்சேர்கின்றார்கள். தாம் தாம் செய்த புண்ணிய கர்மங்களின் பலன்கள் மிச்சமின்றி முடியும்வரை தேவலோகத்தின் சுகங்களை அனுபவிக்கின்றார்கள். புண்ணியங்கள் மிச்சம் இன்றி தீர்ந்து போனதும் மீண்டும் பிறவி எடுக்கிறார்கள். ஆனால் ஆசைகளைத் துறந்து தம் கடமைகளைச் செய்கின்றவர்களும் நான் தான் எல்லாம் என்ற அகங்காரம் இல்லாதவர்களும் சுக்லமார்க்கத்தின் வழியே பகவானுடைய பரமதாமத்தை அடைவார்கள் அவர்களுக்கு மறு பிறவி என்ற ஒன்றும் இல்லை.

எந்தக்கர்மங்களின் பயனாக சுவர்க்கமும் அங்குள்ள போகங்களும் கிடைத்தனவோ அவை முடிந்தவுடன் அந்த உயிர் கட்டாயமாக அங்கிருந்து வரநேர்கின்றது. சுவர்க்க லோகத்திலிருந்து ஆகாயத்தை அடைந்து வாயு வடிவமாக மாறி பின் புகையாக மாறுகின்றது. அந்தப் புகை மேகத்துடன் சேர்கின்றது. பிறகு மழை நீராகப் பூமியில் பொழிகிறது. பூமியில் கோதுமை, சோளம், எள், நெல் முதலிய விதைகளிலோ மரங்களின் விதைகளிலோ சேர்கிறது. இந்த உணவுகளை காய்கறிகள், பழங்களை உண்ணும் ஆண்மகனுடைய சுக்கிலத்தில் அந்த உயிர் சேர்கிறது. ஆண்மகனின் சுக்கிலம் பெண்ணுடன் சேர்ந்து தன்னுடைய கர்மபலனுக்கேற்ற உடலைப் பெறுகின்றது.

இதிலிருந்து நிச்சயம் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன வென்றால் எவன் ஒருவன் பகவானைச் சரணடைந்து வேறு சிந்தனையின்றி இறைவனையே பக்தியுடன் இடைவிடாது சிந்தனை செய்து கொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாக்கடமைகளையும் ஆற்றுகின்றானோ வேறு எந்த விடயங்களிலும் ஆசையோ, பற்றோ, தேவையோ கொள்வதில்லையோ அவனுடைய வாழ்க்கையை வழி நடாத்தும் எல்லாப் பொறுப்புக்களையும் பகவான் ஏற்றுக் கொள்கின்றார்.

மனிதன் எந்த நிலையில் இருந்தாலும் தனது வர்ணம், ஆசிரமம், இயல்பு, சூழ்நிலை இவற்றிற்கேற்றவாறு விதிக்கப்பட்ட கடமைகளைச் செய்யத்தான் வேண்டும். வாழ்வின் உய்வுக்கு அதைத்தவிர வேறு வழியில்லை இதை நிச்சயப்படுத்தி பகவான் கீதையில் கீழ் கண்டவாறு கூறுகின்றார்.

1. கடமையைச் செய்யாமல் அதன் உச்சகட்டப்பலனை அடைய முடியாது.
2. கடமைகளைச் செய்யாமல் விடுவதால் மட்டும் ஞான முத்திபெற முடியாது. அதாவது கடமையைச் செய்யாமல் அறிவியலைமட்டும் கற்பதால் ஒருவனுக்கு ஞானம் கிடைக்காது.
3. ஒரு துளிகூட மனிதன் செயல் ஆற்றாமல் இருக்க முடியாது.
4. வெளிப்படையாகக் கடமைகளைச் செய்யாமல் விட்டுவிட்டு மனதில் அவற்றின் பயன்களான போகங்களையே நினைத்துக்கொண்டிருப்பது போலி நடத்தையாகும்.
5. மனதையும், புலன்களையும், வசப்படுத்திப் பற்றற்றுக் கடமைகளை ஆற்றுபவன் சிறந்தவன்.
6. கடமைகளைச் செய்யாமல் இருப்பதைவிட கடமைகளைச் செய்வதே மேல்.
7. செயல் ஆற்றாமல் இருந்தால் அன்றாட வாழ்க்கை நடைபெறாது.
8. உலக நன்மைக்காகச் செய்யப்படும் கடமை பந்தப்படுத்தாது சுகத்தைக் கொடுக்கும்.
9. கடமையைச் செய் பலனை எதிர்பாராதே என்பது ஆண்டவன் கட்டளை.
10. கடமைகளை ஆற்றாமல் அவற்றின் பயன்களை அனுபவிப்பவன் திருடன்.
11. கடமைகளை ஆற்றி அதில் வரும் வருவாயில் தன் உடல் நலனுக்காக உண்பவன் எல்லாப் பாவங்களில் இருந்தும் விடுபடுகிறான்.
12. பசித்தவர்களுக்கு அன்னம் வழங்காமல் தன் உடலைப் பேணுவதற்காக மட்டும் அன்னம் சமைப்பவன் பாவியாவான்.
13. கடமைகளை ஆற்றாமல் விட்டு விட்டுப் படைப்புச்சக்கரத்திற்குத்தடை போடுபவனுடைய வாழ்க்கை வீண் பாவமயமானது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேள்வி – சாஸ்த்திர முறைப்படியின் செயல்

↓

மழை

↓

அன்னம்

↓

உயிரினங்கள்

இவ்வாறு உயிரினங்கள் அடங்கிய மனிதன் செய்யும் செயல்களால் வேள்வி வேள்வியிருந்து மழை என்று படைப்புத் தொடர்ச்சி என்றுமே சக்ரமாகச் சுழல்கின்றது. இதைத்தான் படைப்புச் சக்கரம் என்பது.

14. பயனை எதிர்பாராமல் கடமை செய்வதால் இறைவனை அடையலாம்.
15. நம்முன்னோர்களான ஜனகர் முதலானோர் கடமைகளை ஆற்றித்தான் பேறு பெற்றார்கள்.
16. உலக மக்கள் மேன்மக்களான பெரியோர்களின் வழியைப்பின்பற்றுபவர்கள் ஆகவே பெரியோர்களுக்கு கடமைகளைச் செய்யத்தான் வேண்டும்.
17. இறைவனுக்குக் கடமைகளே கிடையாது. ஆயினும் அவரும உலகிற்கு வழிகாட்டியாகக் கடமைகளைச் செய்கின்றார்.
18. ஞானிக்கும் கடமைகள் கிடையா ஆயினும் அவரும் உலகமக்களுக்கு வழி காட்டியாகக் கடமைகளைச் செய்கின்றார்.
19. ஞானி கடைமைகளைச் செய்யாமல் விட்டுவிட்டோ கடமைகளைச் செய்யாமல் விடலாம் என்று உபதேசம் செய்தோ எவ்விதத்திலும் மக்களைக் கடமைகளிலிருந்து வழுவச்செய்யக் கூடாது ஞானி தானும் கடமைகளைச் செய்து மற்றவர்களையும் ஊக்குவிக்க வேண்டும்.
20. விதிக்கப்பட்ட கடமைகளைச் செய்யாமல் விட்டு விடுவதற்கு மக்களுக்கு உபதேசம் செய்து கடைமையில் ஈடுபட்ட மனிதர்களைக்கலைக்காமல் இருப்பது தான் ஞானிகளுக்கு உசிதம் ஆகும்.

இவ்விதம் கடமைகளைச் செய்ய வேண்டும் என்று பகவான் வேண்டுகின்றார்.

**த. சிவபாதம்**
*ஓய்வுநிலை ஆசிரியர்,*
*பாண்டிருப்பு-02.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்பொழுதும் இறையோடு இணைந்திடுக!

பிறப்புவிதியென்றால் இறப்பிம் அதுவே
அந்தவகையில் நீங்கள்
இந்த மண்ணைவிட்டு அவ்வுலகு சென்றீர்கள்.
வேண்டும் வரம் அருளி
வினைபோக்கும் திரௌபதை
அம்மன் ஆலயம் அமைந்த நற்பதியாம்
பாண்டிருப்பு மண்தந்த
பண்புநிறைந்த ஐயாவே!
முப்பத்து நான்கு வருடங்கள்
முறையாக நீங்கள் புரிந்த
அளப்பரிய சேவைகளால்
கல்விச் சமூகத்தில் கனதியான்
இடத்தினைப்பிடித்து
ஏற்ற நிலை கண்டதனால்
மாணவர்கள் வாழ்வினிலே
மகத்துவங்கள் பல கண்டு
உயர்நிலை பெற்றதனை ஊரார்நன்கறிவார்.

தமிழுக்கும், சமயத்துக்கும்
தொண்டு செய்தோன் சாவதில்லை
அந்தவகைதனிலே
ஐயா! நீங்கள் அளப்பரிய சேவைகளை
அந்த நாளில் செய்தீர்கள்
அரசியல் மேடைகளில் நீங்கள்
ஆற்றிய பேச்சுக்கள் எல்லாம்
ஆற்றல் மிகுந்ததென்று அனைவரும் கூறுவார்கள்.
பாண்டிருப்பு ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார்
ஆலய சைவபரிபாலன சபையின்
தலைவராயிருந்து இறைபணி செய்ததுடன்
இந்து இளைஞர் மன்றத்தை உருவாக்க
இயன்றவரை முயற்சிகள் செய்தவர் நீங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பகாலத்தில் திருமலை மாவட்டத்தில்
ஆசிரிய பணிபுரிந்து வருகின்ற வேளையிலே
தோப்பூர் (மூதூர்) நற்பதியில்
தோண்றிய நற்புதல்வி நாகேஸ்வரிதன்னை
வதுவை புரிந்து வளத்தோடு வாழ்ந்தீர்கள்!
பாண்டிருப்பு மகாவித்தியாலயத்தில்
ஆரம்பப்பகுதி அதிபராக நீங்கள் இருக்கையிலே
ஆசிரியராக நான் மாற்றம் பெற்று
அங்கே வருகையில் உங்களைக் காண்கின்றேன்
தமிழில், சமயங்களில் சந்தேகம் ஏற்பட்டால்
தருந்த விளக்கங்களை எனக்குத்தருவீர்கள்
வாழ்க்கைத்தத்துவத்தை வளமாக எடுத்துரைப்பீர்
மாணவர்மன்றங்கள்
தமிழ்மொழித்தினப்போட்டி
நிகழ்வுகளிலெல்லாம் என்னுடன் இணைந்தீர்கள்
1996ல் நீங்கள் ஓய்வுநிலை பெற்றதையிட்டு
நிகழ்ந்த பெருவிழாவினிலே
அன்று நான் வாசித்த வாழ்த்துக்கவிதைகள்
இன்றும் என் நெஞ்சில் நினைவாய் நிற்கிறது.
மண்மீது மனித நேயமுடன் வாழ்ந்த
என் இதயம் போற்றும் இராசதுரை என்னும்
ஏற்றம் மிகுந்த ஐயாவே!
பூவுலகு விட்டு பொன்னுலகம் சென்ற
உங்கள் ஆன்மா இறையோன் பாதத்தில்
உன்னத நிலை கண்டு சுவர்க்க சுகங்காண
எல்லாம் வல்லவனாம் இறைவனை மனமுருகி
இந்தவேளையிலே வேண்டித்துதிக்கின்றேன்.

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

**பாவாணர் அக்கரைப்பாக்கியன்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்

13 - 02 - 1936



மறைவு

22 - 06 - 2015

பாண்டிருப்பைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

## திரு. கனகசிங்கம் இராஜதுரை

(ஓய்வு பெற்ற அதிபர்)

அவர்கள் 22 - 06 - 2015 ந் திகதி திங்கள்கிழமை காலமானார்

அன்னார் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கனகசிங்கம் மகேஸ்வரி தம்பதியினரின் அருமை மகனும், காலஞ்சென்ற விநாயகமூர்த்தி மற்றும் சீதேவிப்பிள்ளை ஆகியோரின் மருமகனும், வரகுணன் (பரீட்சைத்திணைக்களம்-கொழும்பு), கிருபாகரன் (பிரதேசசெயலகம்-காரைதீவு), சுதாகரன் (துறைமுக அதிகாரசபை - திருகோணமலை), நளினி (லண்டன்), தாரணி, சதீஸ்கரன் (நீதவான் நீதிமன்றம்-மட்டக்களப்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரமூர்த்தி, நடராசா, சிவராசா, பாக்கியராசா மற்றும் தவமலர், ரதிமலர் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், கருணையம்மா, கனகம்மா, சிவபாலன், கௌரிபாலன் மற்றும் இராசம்மா, குமாரசூரியன், ஜெயபாலன், சிவானந்தபாலன், பாலசுப்பிரமணியம், இராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், செல்வமினா, சுபாஷினி (விஷ்ணுமகாவித்தியாலயம்-பெரியநீலாவணை), ரவீந்திரராஜ் (லண்டன்), முகுந்தன் (விவேகானந்தா மகாவித்தியாலயம், 1ம்கிராமம் - நாவிதன்வெளி) ஆகியோரின் மாமனாரும், இராதாகிருஷ்ணன், கலைச்செல்வி, ஜெயகிருஷ்ணன், ஜெயந்தினி, கோபிகிருஷ்ணன், சஞ்சீவ்குமார், ஜீவிதன் ஆகியோரின் தாய்மாமாவும், நாகநந்தினி, தேவரஞ்சினி, சூரியகுமாரன், சிவகுமாரி, பரமேஸ்வரவர்மன், திருமால்வளவன், அங்கயற்கண்ணி, சிற்றரசு, கலையரசி, லிங்கரசி, நிதியரசி, விஜிதா, பிரபா, கிருஷ்ணவேணி ஆகியோரின் சித்தப்பாவும், காலஞ்சென்ற வரதராஜன், மற்றும் சாந்தசொரூபி, கயல்விழி, கலாராணி, ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும், ஜெகருசினி, திலக்சினி, வர்ணிகா, சப்தனா ஆகியோரின் அப்பப்பாவும், நிதுர்சிகா, சங்கீத், பிரகீத், நிஷப்திகா, துர்க்காஷினி, நிதுர்ஷ்னவி ஆகியோரின் அம்மப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 24- 06 -2015 ந் திகதி புதன்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு பாண்டிருப்பு பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

விக்டரி அச்சகம், கல்முனை.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உங்கள் மாணவனது மனப்பதிவு

**அமரர். க. இராஜதுரை** (ஆசிரியர் ஓய்வுநிலை)

(சின்னஜயா)

- ஈர விழிகளுடன் நினைத்துப் பார்க்கின்றேன்! -



அறுபதாம் ஆண்டின் நடுப் பகுதி
தங்கள் ஆசிரிய கலாசாலை வெளியேற்றம்:
வெள்ளை நிறம் வெள்ளை உடை
வெள்ளை மனதோடு பள்ளிக் குடியிருப்பு வருகை!
உங்கள் வருகையுடன் எங்கள் பள்ளி
குருகுலமாய் மாறியது
எமக்கோ "சேர்" என்று சொல்லத் தெரியாது!
அனைவர்க்கும் நீங்கள் "சின்னஜயா" தான்.

கண்ணெனத் தகுந்த எண்ணும் எழுத்தும்
எமக்குப் போதித்த இறைவன் நீங்கள்
மூன்றாம் வகுப்பை நான் முடித்தபோது
நான்கைவிட்டு ஐந்துக்கனுப்பி,
புலமைப் பரிசில் போட்டியில் இணைத்து மூதூர்
வட்டாரத்தில் முதன்மையாக்கியவர் நீங்கள்
இது நடந்தது அறுபத்தி மூன்றில்
இன்று ஆச்சரியம் ஏன் நம்பமுடியாததும் கூட
பொது விஞ்ஞானம் எண் கணிதம் தமிழ், சுகாதாரம்
பாடங்கள் அத்தனையும் தனி ஆவர்த்தனமாய்
நடம்பதித்தவர் நீங்கள்,

சபை நடுவே படுமரமாய் நிற்பாது என்னை
தலை நிமிரவைத்து உலகை கண்டவர் நீங்கள்
பேராதனையில் பொருளியல் சிறப்பு
திறந்த பல்கலையில் சட்டமாணி
இன்று சட்டக்கல்லூரியில் இறுதி நிலை என்று
எந்தன் உயர்வுக்கு உரமானது உங்கள் அத்திவாரம்

நான்கண்ட பல்லாசிரியர்களில்
நல்லாசிரிய மகுடம் நீங்கள்
சின்னஜயா!
மரணம் உங்களை அழைத்திடலாம்.
மரணம் உங்கள் உடலை அழித்திடலாம்!
ஆனால் உங்கள் மாணவர்கள் மத்தியிலோ என்றும்
அணையா ஒளிவிளக்கு! ஒளி வீசும் மணிமகுடம்!

**பள்ளிக்குடியிருப்பு,**
**தோப்பூர்.**

**23.06.2015**

**திரு. கந்தையா தவராஜா**
(மாகாணப் பணிப்பாளர் (கிழக்கு), ஓய்வுநிலை
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்)

70 ஆதவன் அச்சகம், அரசடி, மட்டக்களப்பு. 065 2222076.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓய்வு பெற்ற அதிபர் - அமரர் திரு.க.இராசதுரை அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிராத்திக்கின்றோம்

ஐயா ! இராசதுரை,

பாண்டிருப்பின் பவித்திரமே
குருவாய் வாழ்வு தந்து - வருவாய்
மொழிக் கலை நவின்று
அருள்வாய் பல ஆசியென்று
ஆவலோடு ஓடிவந்தேன் - ஆவி
தொலைத்துவிட்டு ஆழ்துயில் கொள்ளலாமோ!

பள்ளிக்குடியிருப்பின் கலைச்சுடரே!
ஆசானாய் முதல்த் தடம் பதித்தீர்
அதிபராய் முதல் வடம் பிடித்தீர்
ஆற்றலோடு எம் ஊர் உறவறிந்தீர்
மாற்றலாகிச் சென்றாலும் மகிமைமிக்க இடம் பிடித்தீர்
தேற்றுலாய் தாள் பிடித்தேன் - உன்சிடன்
தலைதடவ மறந்து தீராத நித்திரையோ!

களப்பின் முத்து ஒன்று - முத்தூரின்
சொத்து என்று வரைய மொழி போதவில்லை
ஆசான் உமையன்றி ஆர் வளர்த்தார் - எமைஅன்று
பேசப் பெரிதுவக்கும் பேரறிவுப் பொக்கிசமே!
மாண்டவரை மீட்டெடுக்கும் உயர்கல்வி யானறியேன்.
ஆண்டவரைப் பணிகின்றேன் - என்ஆசான்
ஆத்துமத்தை அணைத்துக் கொள் உன்னுடனே!

எந்தையே எனத்துடிப்போர்
சிந்தையில் சாந்தி வர
உற்றமொடு ஊரும் உம்பிரிவைத் தாங்கி எழ
கற்றவரும், மற்றவரும் கண்ணியமாய் வழியனுப்ப
சிவலோகம் சென்று வாரீர்.

ஆழ்ந்த அனுதாபங்களுடன்,
ஆ.செல்வநாயகம், தி/பள்ளிக்குடியிருப்பு
தோப்பூர் - மூதூர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## எழுத்துக்களும் அதற்குரிய எண்களும்

| எண் | எழுத்துக்கள் |
|---|---|
| 1 | A,I,R,Y |
| 2 | B,K,R |
| 3 | C,G,L,S |
| 4 | D,M,T |
| 5 | E,H,N,X |
| 6 | U,V,W |
| 7 | O,Z |
| 8 | F,P |

**பேசிவிட்ட வார்த்தை**

**தொடுத்துவிட்ட அன்பு**

**இழந்துவிட்ட வாய்ப்பு**

இந்நான்கையும் திரும்பப் பெறமுடியாது

## அல்சர் என்னும் குடல் புண்ணுக்கு

வில்வம் இலைகளைக் கையளவு நன்கு எடுத்து
கழுவித் துப்பரவு செய்து தண்ணீரில் ஊறவைத்துக் காலையில்
வெறும் வயிற்றில் குடித்தால் அல்சர் இல்லாமல் போகும்
குறைந்தது பத்து மணித்தியாலற்களாவது
ஊற வைக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு நோயாளருக்குரிய உணவு வகை

நீரிழிவு நோயாளருக்கு பல வகையான உணவு வகைகள் சிபார்சு செய்யப்பட்டுள்ளன. பல மரக்கறி வகைகள் நன்றாகவும் வேறு சில உணவுகள் மிதமாகவும் உண்ணப்படலாம். சில உணவு வகைகள் சிபார்சு செய்யப்படவில்லை.

சுதந்திரமாக உண்ணப்படக் கூடிய உணவு வகைகள்
(4 மேசைக் கரண்டி வரை)

| | | |
|---|---|---|
| ⇨ கரட் | ⇨ போஞ்சி | ⇨ பூசணி |
| ⇨ புடலங்காய் | ⇨ பச்சை இலை வகை | |
| ⇨ சாம்பல் பூசணி | ⇨ முள்ளங்கி | ⇨ வெண்டி |
| ⇨ வெள்ளரி | ⇨ முருங்கைக்காய் | ⇨ நோகோல் |
| ⇨ கத்தரி | ⇨ கோகிலாத் தண்டு | ⇨ லீக்ஸ் |

நடுத்தர அளவில் உண்ணப்படக் கூடியவை.

- சிவப்பரிசி மதிய உணவுக்கு 2 - 6 பரிமாறல். இரவு உணவுக்கு குறைவான பரிமாறல் (1 பரிமாறல் - 1/2 கோப்பை சமைத்த அரிசி) குழந்தைகளுக்கும், இளம் பராயத்தவர்களுக்கும் அதிகளவு தேவைப்படலாம். சோற்றின் அளவு உங்கள் உடல் நிறைவுக்கேற்ப தீர்மானிக்கப்பட வேண்டும்.

- கோதுமை ஆட்டா மாவுக்கு பதிலாக அரிசிமா, சோயாமா, குரக்கன்மா உணவு வகைகள் விரும்பத்தக்கது.

- பருப்பு, கொண்டைக்கடலை, பச்சைப்பட்டாணி, சோயா அவரை மற்றும் எண்ணெய் புரதம் நிறைந்த தானியவகை (1/2 - 1 கோப்பை சமைத்த தானியம்)

- உருளைக்கிழங்கு, பீற்றூட், சாம்பல் வாழை (1 - 2 மே.க.) சமைக்கும் பலாக்காய், பலாப்பழம், மரவள்ளி, வற்றாளைக்கிழங்கு, எப்பொழுதும் ஒரு தடவை நடுத்தர அளவில் நார்ப்பொருளுடைய அரிசி போன்ற உணவுடன் சேர்த்து உண்ணப்படலாம். அரிசியின் ஒரு பகுதியைக் குறைத்து இதைச் சேர்க்கலாம். (கர்ப்ப காலத்தில் குருதிக் குளுக்கோஸ் சிறந்த கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டி இருப்பதால் இந்த உணவுகளை தவிர்க்கவும்)

- அரிசி மாவில் செய்த உணவு கிடைக்காவிடின் நீங்கள் அதிக நார்ச்சத்துள்ள பருப்பு போன்றதொரு உணவுடன் சேர்த்து பாண், கோதுமைமா உணவுகள் மற்றும் ஆட்டாமா உணவினை உட்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல் உறுப்புக்கள் செய்யும் பணிகளும் நேரமும்

நமது உடலில் உள்ள ஒவ்வொரு உறுப்புகளும் ஒரு சில மணிநேரத்தில் தான் தங்களது பணிகளைச் செய்கின்றன. அந்த நேரத்தில் அதற்கேற்ப வகையில் நமது உடல் ஓய்வாக இருக்க வேண்டியது அவசியம்.

இரவு 9 மணி முதல் 11 மணி வரை இந்த நேரம் நமது உடலில் உள்ள நோய் எதிர்ப்புச் சக்திகளை வேலை செய்யும் நேரம் அதாவது நமது உடலில் உள்ள தேவையற்ற அதிகப்படியான ரசாயனங்களை வெளியேற்றும் பணியைச் செய்யும்.

எனவே இந்த சமயத்தில் நாம் படுக்கச் சென்றுவிட வேண்டும் இல்லையெனில் அமைதியாக அமர்ந்து பாடல் கேட்பதும் நல்லது. இந்த நேரத்தில் ஓய்வு எடுக்காமல் வேலை செய்பவர்களின் நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்து விடுகின்றது.

இரவு 11 மணி முதல் 1 மணி வரை ஈரல் தனது வேலைகளைச் செய்யத் தொடங்கும். மேலும் இந்த நேரம் தான் ஆழ்ந்த உறக்கம் கொள்ளும் நேரமாகும். இந்த நேரத்தில் விழித்திருக்க நேரிட்டால் ஈரல் தொடர்பான பிரச்சினைகள் ஏற்படுகின்றன. நள்ளிரவு 1 மணி முதல் 3 மணி வரை இந்த நேரத்தில் கல்லீரல் தனது சுத்திகரிப்புப் பணியைச் செய்கிறது. இந்த நேரமும் மிகவும் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்போம். அதிகாலை 3 மணி முதல் 5 மணி வரை இந்த நேரத்தில் நுரையீரல் தனது சுத்திகரிப்புப் பணியைச் செய்யும். எனவே தான் இருமலால் பாதிக்கப்பட்டவர்கள் பலரும், இந்த நேரத்தில் கஷ்டப்படுகிறார்கள். இருந்தாலும் அதிகாலையில் ஆழ்ந்து உறங்கினாலே இருமல் இயற்கையாகவே சரியாகி விடும் என்கிறது மருத்துவம்.

காலை 5 மணி முதல் 7 மணி வரை இந்த நேரத்தில் பெருங்குடல் தனது சுத்திகரிப்புப் பணியைச் செய்கின்றது. எனவே இந்த நேரத்தில் நமது வயிறு காலியாக இருப்பதோ அல்லது தண்ணீர் மட்டும் பருகி இருப்பது நல்லது.

காலை 7 மணி முதுல் 9 மணி வரை தந்போது சிறுகுடல் தனக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை எடுத்துக் கொள்ளும். எனவே இந்த நேரத்துக்குள்ளாக காலை உணவை முடித்திருக்க வேண்டியது அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் தொடர்ந்து காலை 6.30 மணிக்குள் காலை உணவை எடுத்துக் கொண்டால் குடல் நோய் தாக்கும். அதே சமயம் 7.30 மணிக்குள் காலை உணவை சாப்பிட்டால் நாம் திடகாத்திரமாக வாழலாம்.

மேலும் காலை உணவை தவிர்க்கும் பலர் உள்ளனர். அவர்கள் அந்த பழக்கத்தை கைவிட்டு குறைந்தபட்சம் 9 முதல் 10 மணிக்குள் தங்களது காலை உணவை முடிக்க வேண்டும்.

தாமதமாக உறங்கி, காலையில் வெகு தாமதமாக எழும்புவதால் நமது உடலிலிருந்து தேவையற்ற ரசாயனக் கழிவுகளை வெளியேற்றும் பணி வெகுவாக பாதிக்கிறது. மேலும் இரவு முதல் காலை 4 மணி வரைதான் எலும்பு மச்சையில் ரத்தம் உற்பத்தி செய்யும் பணி நடக்கின்றது.

எனவே நேரத்திற்கு தூங்கச் செல்ல வேண்டியது நமது உடலின் ரத்த உற்பத்திக்கு அவசியமாகின்றது.

ஆரோக்கியத்துடன் வாழ்வதற்கான பழக்க வழக்கங்களை இன்றில் இருந்தே கடைப்பிடிக்க வேண்டும்.

*நிகழ்காலக் கடமைகளைச் சரிவரச்*
*செய்பவர்களே பருவங்காலத்தில்*
*தங்கள் இலட்சியத்தை அடைகின்றார்கள்*

*நீ எதை நினைக்கிறாயோ*
*அதுவாக ஆகிறாய் உன்னை*
*வலிமையுடையவன் என்று*
*மனப்பூர்வமாக நினைத்தால்*
*வலிமை படைத்தவன் ஆவாய்!*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

# பஞ்சபுராணம்

## தேவாரம்

இடரினும் தளரினுமெனதுறு நோய்
    தொடரினும் முனகழல் தொழுதெழுவேன்
கடல் தனிலமுதொடு கலந்த நஞ்சை
    மிடறினி லடக்கிய வேதியனே
இதுவோ எமையாளு மாறீவதொன்
    றெமக்கில்லையேல்அதுவோ உனதின்னருள்
ஆவடு துறையரனே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலாமணியே
    அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கி பொழுதினைச் சுருக்கும்
    புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
    செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
    எங்கெழுந் தருளுவதினியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உவப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
தெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயை
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிட
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புகழ்

பக்தியால் யானுன்னைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள்வாயே - முருகா
உத்தமமா தான சற்குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞான சத்தினிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே.

*********


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தசஷ்டி கவசம்

### காப்பு

### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்விணைபோம், துன்பம்போம்,
நெஞ்சிற் பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்
கதித்தோங்கும் நிஷ்டையும் கைகூடும் நிமலர் அருள்
கந்தர் சஷ்டி கவசந் தனை.

### குறள்வெண்பா

*அமரர் இடர் தீர அமரம் புரிந்த*
*குமரன் அடி நெஞ்சே குறி.*

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக்கு உதவுஞ் செங்கதிர் வேலோன்:
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட,
மையல் நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில் வேலால்எனைக் காக்கவென்று உவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறுஇடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் நித்தம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரர ரரர
ரிவண பவச ரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண்டு ஆயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டு இலங்க
விரைந்துஎனைக் காக்க வேலோன் வருக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொலி யையும்
நிலைபெற்று என்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனிஒளி யொவ்வும்
குண்டலி யாம் சிவகுகன் தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறுஇடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறுஇரு திண்புயத்து அழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்துஅணி மார்பும்
செப்பழகு உடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற் சீராவும்
இருதொடை அழகும் இணை முழந்தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செககண
மொகமொக மொகமொ மொகமொ மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரர ரரர ரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
எந்தனை யாளும் ஏராகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதன் என்று
உன் திருவடியை உறுதியென்று எண்ணும்
என்தலை வைத்து உன் இணையடி காக்க


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல்காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினை காக்க
விழிசெவி இரண்டும் வேலர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத்து இருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்இளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேர்இள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாண்ஆம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவர் இருக்க
நாவில் சரஸ்வதி நல் துணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்கத் தடையறத் தாக்க
பார்க்க பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வாலாஷ்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளவாய் பேய்களும் குறளைப்பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம்ம ராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங் காரரும் மிகு பல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடி விழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகள் உடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒருவழிப் போக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாள் எனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடல் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கைகால் முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்குச் செதில் செதிலாக
சொக்கு சொக்குச் சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணல் எரி
தணல்எரி தணல்எரி தணல்அது ஆக
விடுவிடு வேலை வெருண்டது ஓடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந்து ஓடப்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடுத்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவான் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தறணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாது ஓட நீ எனக்கு அருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாகவும்
உன்னைத் துதிக்க உள்திரு நாமம்
சரவண பவனே! சையொளி பவனே!
திரிபுர பவனே! திகழ்ஒளி பவனே!
பரிபுர ட'வனே! பவமொழி பவனே!
அரிதிரு மருகா! அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே! கதிர்வே லவனே!
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே! சங்கரன் புதல்வா!
கதிர்காமத்து உறை கதிர்வேல் முருக
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா!
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா!
சமரா புரிவாழ் சண்முகத்து அரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா விருக்க, யான் உனைப்பாட
எனைத்தொடர்ந்து இருக்கும் எந்தை முரகனைப்
படினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்அருள் ஆக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற்று அடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசன்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென்று அன்பாய் பிரியம் அளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந்து அருளித்
தஞ்சமென்று அடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடன்ஒரு நினைவது ஆகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுஉருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறுஅணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கிலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்த்தங்கு அருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதன் எனவும நல்எழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத்த டியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென உள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபத் தேழ்வர்க்கு உவந்து அமுதளித்த
குருபரன் பழநிக் குன்றனில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத்து ஆட்கொள எந்தன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கு ஓர்அரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரணம் பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

*************

தன்னம்பிக்கை என்பது பயன்
படுத்த வேண்டிய சக்தி அதை
உபயோகித்தால் மட்டுமே
பலன் கிட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நன்றி கூறுகின்றோம்"

எங்கள் தெய்வம்
கனகசிங்கம் இராசதுரை அவர்களின்
மறைவு கேட்டதும் ஓடோடி வந்து
ஆறுதல் கூறி அரவணைத்து நின்ற
அன்பு உள்ளங்களுக்கும் தூர
இடங்களிலிருந்து தொலைபேசி மூலமும்
தொலைநகல் மூலமும் அனுதாபம்
தெரிவித்தவர்களுக்கும் தொலை தூரமிருந்து
வருகைதந்து சோகத்தில் பங்கெடுத்த அவரது
மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும்
கண்ணீர் அஞ்சலி, துண்டுப்பிரசுரங்கள்
வெளியிட்டவர்களுக்கும், இரங்கலுரை
நிகழ்த்தியவர்களுக்கும், இம்மலரை வெளியிட
மனப்பதிவுகளைத் தந்துதவியவர்களுக்கும்,
இன்றைய நாளில் இங்கு வருகை தந்து
அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தனை
செய்தவர்களுக்கும், இம்மலரை அழகுற
அமைத்து உரிய நேரத்தில் அச்சிட்டுத் தந்த
கோல்டன் அச்சகத்தாருக்கும், மற்றும்
அனைவருக்கும் எங்கள் உளமார்ந்த
நன்றிகள் உரித்தாகட்டும்.

**இங்ஙனம்**
**- குடும்பத்தினர் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய்
அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.



– பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org